# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. III** **Issue 5** **August 2013**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 2 |
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 3 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 16 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 18 |
| அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் . . . | 20 |
| வாழ்க்கையை நம் வழிக்கு கொண்டுவரும் இரகசியங்கள் . . | 29 |
| அன்பர் கடிதம். . . . . . . . . . . . . . . | 38 |
| உண்மையின் பல்வேறு பரிமாணங்கள் . . . . . . . . . . . . | 41 |
| அன்னை இலக்கியம் . . . . . . . . . | 52 |
| ஸ்ரீ அரவிந்தரும், மரபும் . . . . . . . | 63 |


**ஜீவியத்தின் ஓசை**

**உடலிலும்**
**வாழ்விலும்**
**மனத்திலும்**
**தோன்றி பூக்கும்**
**ஆத்மா**
**சைத்தியப் புருஷன்**

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

இம்மாதச் செய்தி

**உள்ளதே உலகம்**

**என உணரும் அறிவு**

**அறியாமை.**





## லைப் டிவைன்

கர்மயோகி

# 25. The Knot of Matter

(English Summary)

We are working on some data. It has led us to one conclusion. Out of these data no other conclusion is possible. Our practical experience has created a sharp division between Matter and Spirit. It is out of a long habit of mind. Our conclusion rules out that division. It offers that division no fundamental reality. The world is a differentiated unity, a manifold oneness. There are no eternal dissonances. Nor is there any attempt at compromise. It is not as if they are eternal opposites constantly struggling at a compromise. There are no irreconcilable opposites. There is an inalienable oneness. It generates infinite variety. That is the foundation and beginning. There is an apparent division. There is a struggle. It is to reconcile the division and struggle. There are vast ends in a secret Consciousness. It is the aim . There too is a Will. It is ever one and master of all its own complex action. This appears to be its real character in the middle. It is natural for us to assume a final fulfillment. It is one of the emerging Will and consciousness. A triumphant harmony must be its conclusion. Substance is a form. It works on itself. Of that substance, Matter is one end. Spirit is the other end. We sense something as Matter. Spirit is the soul and reality of that Matter. Matter is the form and body of the Spirit.

Certainly there is a vast practical difference. There is an indivisible series and ever-ascending degree of existence. It is the world existence. This existence is founded on that

series. Substance is conscious existence. It presents itself to the senses as object. A sense relation is established thus. It is the work of the world formation. It is the cosmic progression. It proceeds thus. There need not be only one basis. It is a fundamental relation. It is a principle of relation. It is created immutably between sense and substance. On the contrary, there is a series. It is an ascending series. It is also a developing series. We are aware of another substance. Pure mind works in it. It is a natural subtle medium. It is more flexible and plastic. Our physical sense cannot conceive of anything more subtle than this. We can speak of a substance of mind. We become aware of a subtler medium. Forms arise in this medium. There action takes place. We can speak of another substance too. It is one of pure dynamic life energy. It is other than the subtler forms of material substance. It has physically sensible force currents. Spirit itself is pure substance of being. It presents itself as an object. It is not to the physical, vital, mental sense. It presents itself to the pure spiritual perceptive knowledge. There the subject is the object. There the Timeless and Spaceless is aware of itself. It is a pure spiritually self-conceptive self-extension. It is the basis of the primal material of all existence. There is something beyond this foundation. All conscious differentiation disappears there. It is between subject and object. Now there is the absolute unity of identity. There we can no longer speak of Substance.

It is purely a conceptive difference. It is not a mentally conceptive one, spiritually conceptive. It is a difference ending in practical distinction. It creates the series. It descends from Spirit to Matter. It does so through Mind. It again ascends to the Spirit. Again it goes through Mind. But the real oneness is never abrogated. Now we get back to the original view. It is an integral view of things. We see it is never even truly diminished. It is not impaired. Not even in the grossest densities of Matter. Brahman is the cause and supporting material to the universe. It is also an indwelling



principle of the universe. Also Brahman is its material. It is its sole material. Matter is also Brahman. It is nothing other than Brahman. If it were cut off from Spirit, this would not be so. We have seen Matter is the final form of divine Existence. It is the objective aspect of it. All of God is ever present in it. God is behind Matter. Matter is apparently brute and inert. It is everywhere. It is instinct with the force of Life. It is a mighty dynamic force. This is dynamic and appears to be unconscious Life. It secretes within it an ever present, ever-working and unapparent Mind. Its secret dealings are overt energy. This ignorant, unillumined and groping Mind is in the living body. It is guided and supported by its real self. This is the Supermind. Supermind is there equally in unmentalised Matter. So, all Matter, Life, Mind, Supermind are only modes of Brahman. Brahman is the Eternal. It is the Spirit, Sachchidananda. It dwells in them all. It is all these things. No one of them is His absolute being.

But still there is this conceptive difference and practical distinction. Let us suppose Matter is not really cut off from Spirit. Yet because of this practical definiteness, it seems to be cut off. It is still different. It may be contrary to its law. The material life seems to be a negation. It appears to be a negation of all spiritual existence. Such a rejection may well appear to be a short cut. It is a short cut out of our difficulty. It undoubtedly is. It may be a shortcut or any cut. But it is no solution. Still the crux lies in Matter. There is no doubt about it. That raises the obstacle. Because of Matter, Life is gross and limited. It is stricken with death and pain. Because of Matter Mind is more than half blind. Its wings are clipped. Its feet are tied to a narrow perch. It is held back from the vastness and freedom above. It is conscious of them. Here is the exclusive spiritual seeker. He is justified in his viewpoint. He is disgusted with the mud of Matter. He is revolted against the animal grossness of Life. He is impatient of the self-imprisoned narrowness. His vision of Mind is downward. He determines to break from it all. He decides to return to

his inaction and silence. It is the Spirit's immobile liberty. But that is not the sole point of view. It has been sublimely held. It was glorified by golden examples. Therefore we need not consider its integral and ultimate wisdom. Let us liberate ourselves from all passion and revolt. Let us see what this divine order of the universe means. This is a great knot of tangle of Matter. It denies the Spirit. Let us find out the separate strands. Let us separate them. Let us loosen it by a solution. Let us not cut it by violence. We must state the difficulty. It is the opposition. Let us do so first entirely, trenchantly with exaggeration if necessary, rather than with diminution. And let us look for the issue.

There is then the first opposition of Matter to Spirit. It is Ignorance. Rather the culmination of the principle of Ignorance. In ignorance consciousness is lost in its works. It has forgotten in the form of its works. A man forgets himself in the work. He forgets that he even exists. Momentarily he becomes the work. Even he becomes the force that is doing the work. The Spirit is self-luminous. It is infinitely aware of itself. It is there behind all workings of the force. It is its master. It seems to have disappeared. It does not seem to be at all. Somewhere He is perhaps. Here, He left only a brute inconscient material Force. It creates and destroys eternally. It does not know itself. It does not know what it created or why it creates. Or it knows not why it destroys what it has created. It does not know as it has no mind. It does not care as it has no heart. The material universe has a truth. This may not be that truth. Behind this entire phenomenon there is a Mind. There is a Will. There is something greater than the Mind and the Will. Yet it is a dark semblance. The material universe presents as a truth to its consciousness. Consciousness emerges out of the night. But it is no truth, but a lie. Yet it is a most effective lie. For it determines the conditions of our phenomenal existence. It besieges all our aspiration and effort.



Matter is a monstrous thing. It is a terrible, pitiless miracle of the material universe. Out of this No-Mind a mind or at least minds emerge. They find themselves struggling for light. It is helpless individually, only less helpless in self-defence. They are in the midst of giant Ignorance. They are there individually feeble. Ignorance is the law of the universe. This is a heartless Inconscience. Its jurisdiction is rigorous. Out of this hearts have been born. They aspire and are tortured. They bleed under the weight of cruelty. The cruelty is blind and insentient. This is an iron existence. This cruelty lays its laws upon them. It becomes sentient in their sentience. It is brutal, ferocious and horrible. What, after all, is this seeming mystery? What is it behind the appearances. We see it is a consciousness. It returns again to itself. In it, it has lost itself. It emerges out of its giant forgetfulness. It does so slowly, painfully. It returns as a Life that is would-be sentient. It is half-sentient, dimly sentient, wholly sentient. Finally it struggles to be more than sentient. It tries to be divinely self-conscious, free, infinite, and immortal. It works towards this under a law. The law is the opposite of all these things. It works under the conditions of Matter. That is to say, against the grasp of the Ignorance. The movements it has to follow are set. They are made for it by this brute. It is divided Matter. It imposes on it at every step ignorance and limitation.

There is a second fundamental opposition from Matter. Matter opposes Spirit through that. It is a culmination of bondage to mechanic Law. It opposed to all that seeks to liberate itself a colossal inertia. Not that Matter itself is inert. It is rather in infinite motion. Matter is an inconceivable force. It is a limitless action. Its movements are grandiose. They are a subject for our constant admiration. Spirit is free. It is master of itself and its works. It is not bound by them. Spirit is the creator of law and not subject to it. But this giant Matter is rigidly fixed by chains. These laws are fixed and mechanical. They are imposed on it. Matter does not understand those laws. It has never conceived of them. But

it works out inconsciently. It works as a machine works. It knows not who created it. Nor does it know the process or the end. Life awakens. Life seeks to impose itself on physical form. It does so on material force. It uses all things at its own will. It does so for its own need. Mind awakes and seeks to know the who, the why, the how of itself. It seeks to know all things. Above all, it seeks to use its knowledge. It does so to impose its own freer law. It is self-guiding action upon things. Material Nature seems to yield. Even it seems to approve and aid. For a while it struggles. It does so reluctantly. It is so only up to a certain point. Beyond that point it presents an obstinate inertia. It presents obstruction as well as negation. Matter persuades Mind and Life they cannot go further. Their victory is partial. It cannot be pursued to the end. Life strives to enlarge and prolong itself. It succeeds. Life seeks utter wideness and immortality. It meets with the iron obstruction of Matter. Life finds itself bound to narrowness and death. Mind seeks to aid life. It seeks to fulfil its own impulse. It is to embrace all knowledge, all light. It seeks to possess truth and be truth. It tries to enforce love and joy and be love and joy. But always there is deviation. There is error and grossness of the material life instincts. It is a denial and obstruction. It denies the material sense and the physical instruments. Error ever pursues its knowledge. Darkness is inseparably the companion. It is the background of its light. Truth is successively sought. Yet, when grasped, it ceases to be truth. The quest has to continue. Love is there, but it cannot satisfy itself. Joy is there, but it cannot justify itself. Each of them drags as its chain. They cast as if its shadow its own opposite. They are anger, hatred, indifference, satiety, grief and pain. The inertia prevents the conquest of the Ignorance. Matter responds with inertia to the demands of Life and Mind. The brute Force opposes. It is the power of the Ignorance.

We want to know why this is so. We see there is a cause behind it. Inertia succeeds because of another basic power.



Inertia obstructs too. That power is division. It is the third fundamental opposition. It is the culmination of the principle of division and struggle. Indivisible is the reality. Divisibility is the whole basis of action. Matter seems to be forbidden even to depart from this principle. It has two methods. They are union and aggregation of the units. Assimilation is the other method of its union. It involves the destruction of one unit by another. Both these methods are a confession of eternal division. The first method associates rather than unifies. It admits of the constant possibility of division. More than unifying, it discloses this principle. It has the ultimate necessity of disassociation. Dissociation is dissolution. Both methods repose on death. One does so as a means. The other does it as a condition of life. And both presuppose another thing. It is constant struggle. World existence needs constant struggle. It is the struggle of the divided units. Each strives to maintain itself. They do maintain their association. They compel or destroy what resists it. They gather in and devour others as food. It is itself moved to revolt against it. It flees from compulsion. They escape destruction and assimilation by devouring. The vital principle manifests its activities in Matter. It finds there this basis only for all of its activities. It is compelled to bow to its yoke. It has to accept the law of death, desire and limitation. And there is the constant struggle to devour, possess, dominate. It is the first principle of Life. The mental principle manifests in Matter. It has to accept the same principle. It does so from the mould and material in which it works. It works the same principle of limitation. It is a seeking without secure finding. It has the same constant association and disassociation of its gains. It is so with the constituents of its works. We see the knowledge gained by men is never final. Man is the mental being. It is never free from doubt and denial. All his labour seems condemned. They move in a rhythm of action and reaction. It makes and unmakes. It is in cycles of creation. It is also of brief preservation and long destruction. There is no certain and assured progress.

Ours is a vital, mental existence. Ignorance, inertia and division are of Matter. Mental and vital are emerging in Matter. These three impose on them the law of pain and suffering and unrest. It is the unrest of dissatisfaction. It is a dissatisfaction with those three statuses. Ignorance would indeed bring no pain of dissatisfaction. It is so when the mental consciousness is entirely ignorant. If it halts in a shell of custom, it is so. In that case, it will be unaware of its own ignorance. Or it can be ignorant of its surroundings. It is an infinite ocean of consciousness and knowledge. Matter awakes to this environment. It is the emerging consciousness that awakes so precisely. It first awakes to the ignorance of the world. It lives in this world. It has to know and master it. Then it can be happy. Secondly, it awakes to the limitation. It is of the ultimate barrenness. It is a limitation of knowledge. It is of a meagerness and insecurity of the power and happiness. It is brought to the awareness of the infinite consciousness. It is one of knowledge and true living. Infinite happiness can be found only in it. Inertia obstructs. It will not bring with it unrest and dissatisfaction. It is so, if the emerging vital is entirely inert. It is satisfied with its own half-conscient limited existence. It will then be unaware of its infinite power. It is immortal existence. It lives in it as a part. Yet, it is separated from it. It is so if there is nothing within driving it towards the effort to participate in that infinity and immortality. All life is so driven to seek this. Life feels it from the first. It has insecurity and the need and struggle for persistence. It is for self-preservation. It awakens in the end to the limitation of its existence. It begins to feel the impulsion towards largeness. It is a persistence towards the infinite and eternal.

In Man, life becomes self-conscious. At that moment this unavoidable struggle in him changes. It becomes too keenly sensible. It is an effort of aspiration also. It reaches its acme. Pain and discord in the world are sensed keenly. He is unable to bear it with contentment. Man may for a long time be quiet himself. He may seek to be satisfied with his limitations.



Or he may confine his struggles to a mastery. Maybe it is the only mastery possible in a material world. He inhabits that world. He may feel some mental, physical triumph of his knowledge. It is a progressive knowledge. It is a victory over the inconscient fixities. They are of his will, small, concentrated, conscious. It has a power over the driving force. It is an inertly driving force. They are monstrous. The results he can achieve are the greatest. Here too he finds the limitations. They are poor and inconclusive. He is obliged to look beyond. The finite cannot remain satisfied. It cannot be permanent. It cannot be so long as it is conscious. It can be a finite greater than itself. Or it may be an infinite beyond itself. It can yet aspire to it. The finite could not be so satisfied. If so, still, there is the apparent finite being. He feels himself really an infinite. Or it may feel the presence more. Or it may feel the impulse of a stirring infinite. It can never be satisfied till the two are reconciled. It may then be possessed by him. And he may be possessed by it then. Its degree of possession may vary. Man is such a finite-seeming infinity. He cannot fail to arrive at a seeking after the Infinite. He is the first son of earth who becomes vaguely aware of God within him. He becomes aware of his immortality or his need for his immortality. And the knowledge is a whip that drives and a cross of crucifixion. It is so until he can turn it into a source of infinite light and joy and power.

This is a progressive development. This is a growing manifestation of the divine Consciousness and Force. It is of knowledge and will that had lost itself in the ignorance. It is inertia of Matter. It might be a happy efflorescence. It may proceed from joy to greater infinite joy. It is the principle of rigid division that prevents it. Matter has started from that principle. The individual is shut up in his own personal consciousness. It is a separate limited mind, life and body. The natural law of our development proceeds. Mind prevents this natural law. It brings into the body the law. It is a law of attraction and repulsion. It is of defence and

attack, of discord and pain. Each body is a limited conscious-force. Each feels itself exposed to attack, impact. It is a forceful contact of other such limited conscious-force. It is of universal forces. They feel themselves broken in upon. It is unable to harmonise the contacting consciousness. It is a recipient consciousness. It suffers discomfort and pain. It is attracted and repelled. It has to defend itself or to assail. It is constantly called upon to undergo something. It is unwilling or unable to suffer it. The law of division brings into the emotional and sense-mind the same relation. They come with higher values of joy and grief, love and hatred, oppression and depression. All are cast into terms of desire. By desire it enters into straining effort. By the straining it enters into excess of defect and force and incapacity. It is a rhythm of attainment and disappointment. It is one of possession and recoil. It is a constant strife and trouble and unease. Mind becomes aware of the defect of its natural being. It is a triple defect and insufficiency. Mind takes up its own affliction. It comes with the affliction of the body and life. Into the mind as a whole, it brings in the dualities of truth. It is pursued by error. Light is pursued by darkness, power by incapacity. Pleasure of pursuit is pursued by the pain of repulse. Attainment is pursued by dissatisfaction of what is attained. The divine law of narrower truth should flow into a greater truth. Instead the dualities are brought. The lower will must be surrendered to the higher transforming will. Pettier satisfaction must progress. It must move towards nobler and more complete satisfaction. All this means denial of Ananda. It is a negation of the trinity of Sachchidananda. If negation is insuperable, it is futile to exist. Existence throws itself out in the play of consciousness and force. It must seek the movement. It is not only for itself but for the satisfaction in the play. If in the end no satisfaction is found, it must be abandoned. It will be a vain attempt. It will be a colossal mistake. It will be a delirium of the self-embodying spirit.



This is the whole basis of the pessimistic theory of life. Maybe it is optimistic as to worlds and states beyond. But it is pessimistic as to earthly life. It is so as to the destiny of the mental being. Well, it is optimistic as to the material universe. For it affirms that since the very nature of material existence is division, to seek satisfaction of the spirit upon earth is vain. The very seed of the embodied mind is self-limitation, ignorance, egoism. To seek an issue and divine purpose and culmination for the world play is a vanity. It is a delusion. Only in the heaven of the Spirit can we unite existence and consciousness. They are reunited with the divine self-delight. It is not in the world. It is possible only in Spirit's true quietude. It is not possible in its phenomenal activities. The Infinite can recover itself. It can do so by rejecting as an error its effort to find itself in the finite. The mental consciousness emerges in the material universe. It cannot bring with itself any divine fulfillment. The principle of division is proper to the Mind, not to Matter. Matter is only an illusion of Mind. Mind brings into Matter its own rule of division and ignorance. Therefore, within that illusion of Mind one can find itself. The divided existence has three terms. It can only travel between them. The divided existence has been created by the Mind. It cannot find there the unity of the Spirit. Nor can it find the truth of the spiritual existence.

The principle of division is in Matter. It can be only a creation of the divided Mind. Mind, it is true, has precipitated itself into material existence. That material existence has no self-being. It is not an original phenomenon. It is only a term. It is created by an all dividing Life-force. It works out the conception of an all-dividing Mind. Mind works out being into these appearances. They are of ignorance, inertia, division of Matter. By this the dividing Mind has lost itself in its own building. Mind loses itself in its own creation. It is imprisonment in a dungeon. Mind is bound with chains that it has forged. It is true that the dividing Mind is a first principle of creation. The mental being struggles vainly with

Life and Matter. It overpowers them and is overpowered by them. Thus it repeats eternally a fruitless cycle. Then it must be the highest word and last word of cosmic existence. But no such consequence ensues. On the contrary, it is true the Spirit has veiled itself. It does so in the dense robe of material substance. It works there by the supreme creative power of Supermind. It permits the divisions of Mind. It permits the reign of the lowest material principle as initial conditions. This is for a certain evolutionary play of the One and the Many. In other words, we arrive at a different Truth. It is not the mental being that is hidden in the universe. What is hidden is the infinite Being. It is knowledge and will. They emerge out of Matter as Life and Mind. The rest are yet unrevealed. Consciousness emerges out of the apparent Inconscient. It must have another and completer term. It is the appearance of a Supramental spiritual being. He shall impose on Mind, vital and physical a higher law than the dividing Mind. This is the inevitable conclusion of cosmic existence.

Such a Supramental being would liberate the mind from the knot of divided existence. It would use the individualization of the mind as a subordinate action. It is a useful subordination. We have seen it. The Supermind is all-embracing. He would liberate life also. It too will be liberated from the divided existence. Here too the individualization will be used only as a subordinate action. It is a subordinate action of the Conscious-Force. It will fulfil its being and joy in a diversified unity. There is no reason why it should not liberate the bodily existence. It is now governed by the law of death. It is also a law of division and mutual devouring. Here too the individualization will be used as a subordinate term. It is a term of the one divine Conscious-Existence. It thus makes itself serviceable for the joy of the Infinite in the finite. There is no reason why the Spirit should not be free. It can be free in a sovereign action of the form. It can be consciously immortal. It can be so even in changing its robe of Matter. The Spirit is possessed of self-delight. It is in a world



subject to the law of unity and love and beauty. Man is the inhabitant of the terrestrial existence. It is through him the transformation can be achieved. It is a transformation from mind to Supermind. It is also possible for him to develop a divine body as well as a divine mind and life. The phrase may seem too startling. This is for the present conception of human potentiality. Man may arrive at a divine use of mind and life and body. Then would the Spirit's descent into form be divinely justified.

One thing can stand in the way. The divine body is an ultimate principle. It is fixed by the view of Matter. Presently its laws represent the only possible relation between sense and substance. It is a relation between the Divine as the knower and the Divine as the object. Other relations too are possible. They are yet not possible here. So, we must seek it in the other planes of existence. Let us accept that to be the case. Then it is in the heavens beyond it is there. Our entire divine fulfillment will then be in the heavens. The religions assert that idea. It is not only that. They assert the idea of the kingdom of God or a kingdom of the perfect on earth. Are we to put it aside as a delusion? Here we can pursue or attain an internal perfection. It is a preparation or a victory. The mind and soul are liberated already. Now we must turn from the unconquered Matter. The material principle is unconquered and unconquerable. It is the intractable, unregenerate earth. We must, then, find the divine substance elsewhere. There are certainly other states of Matter itself. There is undoubtedly a series. It is an ascending series of divine gradations of substance. There is another possibility. It is one of transfiguring Matter. It is through the acceptation of a higher law than its own. Still, it is its own law. It is always there latent and potential in its own secrecies.

******

## Page 153: All by their influence is enacted there
## சொந்த சக்தியால் நடத்தும் நிகழ்ச்சிகள்

- அவர்களுடைய சாம்ராஜ்யமும் அதிகாரமும் அங்கு மட்டுமில்லை
- ஆத்மா இல்லாத மனமும், நோக்கமற்ற வாழ்வும் உள்ள இடங்களில்
- சிறு உடலின் பிரம்மம் மட்டுமே கணக்கில் எழும்
- அன்பும், ஜோதியும் பெரியது மற்ற இடங்களில்
- கோணல் சிற்பிகள் தங்கள் கடமையை மேற்கொள்கிறார்கள்
- அரைகுறையான விழிப்புள்ள லோகங்களுக்கு அவரதிகாரம் செல்லும்
- நம் மனித இதயத்தை இச்சிறு தெய்வங்கள் இங்கு அழைத்துப் போகின்றன
- அவை ஒளிந்துள்ள இடம் நம் இயற்கையின் மாலை மங்கும் நேரம்
- இருண்ட ஆதி மனித இதயம் இதையும் ஏற்கும்
- ஒளிந்துள்ள மனத்தின் மறைபொருளான புத்திமதி
- அத்தவறான ஞானம் நம்மை நிழலாகத் தொடரும்
- நமக்கும், சத்தியத்திற்குமிடையே அது தடையென எழும்
- இரவின் குரல் இருளில் எழுந்து நம்மை விளிக்கும்
- அது நம் இருளைக் காரிருளாக்கும்
- நம் இலட்சியப் பாதை நம்பிக்கையாக ஆபத்தில் கொண்டு விடும்
- அறிவுக்குப் புலப்படாத எண்ணம் அமைப்பை ஏற்று செயல்படும்



- அர்த்தமற்ற சக்தி அறிவைப் பயன்படுத்தும்
- ஆசானாகவும் செவிலித் தாயாகவுமிருந்தது பூமி மட்டுமல்ல
- எல்லா லோக சக்திகளும் எழுந்தருளிய இடமிது
- சொந்த வேலையில் அவர் தவறாது சட்டத்தைப் பின்பற்றுவர்
- அமைந்த பாணியைப் பாதுகாப்பாக ஏற்றுப் போற்றுவோம்
- புவியில் மாறாத பாதையினின்று விலகி
- அச்சட்டம் நிலையானது. இறுக்கத்தை இழந்த நிலை அவர்களது
- குழப்பமான சிருஷ்டிக்கும் திறனுள் அவை புகுந்தன
- நாடுவது ஒழுங்கைப் பெறுவது தற்செயலாய்
- புவியையறியாதவர், பூமாதேவியின் பழக்கத்தையறிய வேண்டும்
- எதிரியுட்பட எவரும் இணைந்து செயல்பட இசைய வேண்டும்
- போரிட்டுப் பாடுபட்டு, வேதனையுடன் ஏற்றார்
- எல்லாப் பகுதியும் புதியதாக சேர்ந்து, இவையும் அவையுடன் சேரும்
- அனைத்தும் அனைவரும் இறைவன் சுமுகத்தை ஏற்கும்வரை செயல்படுவர்
- தாறுமாறான வழி சுற்றிச் சுற்றி வந்து
- என் மனத்தின் அமைதியற்ற ஆராய்ச்சி எப்பொழுதும் தேடுவது ஜோதியையே
- மூலத்தைத் தொட்டு, முழுமையை அறிந்து
- காலம், இடத்தைக் கடந்த வீட்டில் மிளிரும் ஒளி
- பிரம்மம் தரும் ஆனந்தம் தனிச் சிறப்புடையது

★★★

## பகவான் ஆசீர்வாதம் தரும் பலன் வழக்கமானதைவிட உயர்ந்தது

- அற்புதம், வெற்றி என்பது உயர்ந்த லோக சக்தி உள்ளூரில் செயல்படுவது.
- அற்புதம் பல நூறு நிலைகளில் உண்டு.
- எதிரே இடிப்பதுபோல் வரும் கார் விலகுவது ஆபத்து விலகுவது.
- கார் டிரைவர் மத்திய மந்திரியாவது பெரிய அற்புதம்.
- ஆயுர்வேத மருந்து வியாதியைக் குணப்படுத்துவதைத் தவிர உடல் நிலையையும் உயர்த்தும்.
- அட்மிஷன் தேடுபவனுக்கு அட்மிஷன் தருவது அருள்.

  பகவான் ஸ்ரீ அரவிந்தர் அருள்

  — படிக்கவும், தொழில் சிறக்கவும், ஆத்மா மலரவும், அவர் சேவை மூலம் உலகம் செழிக்கவும் செய்யும்.
- அற்புதம் (Overmind) தெய்வீக மனம் மூலம் நடந்தால் தொலைந்த பொருள் கிடைக்கும்.

  அது உள்ள இடத்திலிருந்து கிளம்பி நம்மை வந்தடையும், சூட்சும உலகில் உற்பத்தியாகப் பலன் தரும்.
- மனத்தின் சக்தி வாழ்வில் செயல்படும் அற்புதம் இவை.
- BC, SC-க்கு சட்டத்தில் அட்மிஷனுக்கு ஒதுக்கீடு உண்டு.

  — மார்க் குறைவானாலும் அட்மிஷன் கிடைக்கும்.

  — பாஸ் செய்யவும் இந்த ஒதுக்கீடு ஓரளவு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவும்.

  — வேலை கிடைக்கவும் ஒதுக்கீடு உண்டு.

  — பிரமோஷனிலும் அது வேலை செய்யும்.



- சத்திய ஜீவிய அற்புதம் மனநிலையை உயர்த்துவதால், உயர்ந்த மனநிலைக்குரிய

  — ஆரோக்கியம்

  — அந்தஸ்த்து

  — திறமை உயரும்.
- வாழ்க்கையே எதிராக வேலை செய்வதை தரித்திரமானவர் அறிவார்.

  — வேலைக்குப் போனால் பஸ் கிடைக்காது.

  — பார்க்கப் போகும் மனிதருக்குக் கெட்ட செய்தி வந்து ஆத்திரப்படுவார்.

  தமிழ் நாட்டுப் பழமொழி அவனை விடியா மூஞ்சி என வர்ணிக்கிறது.
- விடியா மூஞ்சி அன்பனானால், அன்னை நினைவு மனத்தை இன்பமாக நிறைத்தால், அதன் காரணமாக மனம் கடுமை மாறி, இனிமையானால்

  — கிராக்கி செய்பவர், நமக்கு உதவி செய்வதை சேவையாக நினைப்பார்.

  — பஞ்சாயத்துக் கௌன்சிலராக முடியாதவன் MLA ஆவான்.

  — வேலைக்காரிக்குத் திருமணம் அதிர்ஷ்டமாகி, கணவர் டெபுட்டி கலெக்டராவார்.

  — எங்கும் நுழைய முடியாதவனுக்கு எல்லா இடத்திலும் வரவேற்பு எழும்.
- பகவானுடைய அற்புதம் சத்திய ஜீவிய அற்புதங்கள்.

  அவை நேரடியாகச் செயல்படுவதில்லை.

  கூடவே வேண்டாத விஷயம் வருவதில்லை.

  கூடவே நல்ல விஷயங்கள் மனம் உயர்வது மூலம் எழும்.

★ ★ ★

## அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### *15. அன்னையும் அன்பர்களும்*

அவர் பாரத ஸ்டேட் பாங்கில் குமாஸ்தாவாகப் பணியாற்றி வரும் ஓர் "அமுதசுரபி" வாசகர்; திருமணமாகாத பெண். அந்தக் குடும்பத்தில் அவர் மூன்றாவதாகப் பிறந்தவர். மூத்தவராக ஓர் அண்ணன்; ஓர் அக்காள்; அவருக்குப் பிறகு அந்தப் பெண்; இவருக்குப் பிறகு ஒரு தங்கை. ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்துக்கு உள்ள எல்லாச் சோதனைகளும், வேதனைகளும் அக்குடும்பத்தில் குறைவில்லாமல் நிறைந்திருந்தன.

கல்யாணத்துக்குத் தயாராக நின்ற மூன்று பெண்களுக்கும் தகுந்த வரன் பார்த்து வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியாத அவலம், எந்தப் பெற்றோரைத்தான் வாட்டாது? அவர்களுடைய பெற்றோரையும் அது அதிகமாகவே வாட்டியது. ஆனாலும் வசதியற்ற அவர்களுக்கு பெருமூச்சு விடுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. மூத்த அண்ணன் அவர்களோடு சேர்ந்து பெருமூச்சாவது விட்டிருக்கலாம். அதற்குக்கூட அவர் தயாராக இல்லை. வீட்டு மனிதர்களைப் பற்றிக் கவலைப்படாத பிறவி அவர்.

அந்த வாசகரின் அக்காள் ஒரு நர்ஸரிப் பள்ளியில் ஆசிரியை; தங்கை ஏதோ ஒரு நிறுவனத்தில் டைப்பிஸ்ட். தம் சகோதரர் என்ன செய்கிறார் என்று அவர் குறிப்பிடவில்லை.

அவருக்குக் குடும்ப நிலை சாதகமாக இருக்கவில்லை என்பதோடு வேறொரு வேதனையாலும் அவர் பாதிக்கப் பட்டிருந்தார். அவருடைய குழந்தைப் பருவத்தில் ஒரு



பொல்லாத விரோதியைப்போல வந்த இளம்பிள்ளைவாதம், அவர் கால்களைச் சிறிதே ஊனப்படுத்தி விட்டுச் சென்றிருந்தது. அவரால் கால்களை அழுத்தி ஊன்றி நடக்க முடியாது; பிறர் உதவியின்றி நீண்ட தூரம் நடக்கவும் முடியாது. இத்தனை போதாது என்று மேலும் சோதனை தொடர்ந்தது. பணி உயர்வுக்காக அவர் ஒரு பரீட்சை எழுதினார். அதில் அவர் தேர்வு பெறவில்லை. மீண்டும் அவர் பரீட்சை எழுதியிருக்கிறார்.

இத்தனை விவரங்களையும் எழுதி இருந்த அந்தப் பெண், "இந்த உலகத்துப் பெண்களுக்கு நடப்பதைப்போல எனக்கும் திருமணம் நடைபெற ஏதேனும் வழி பிறக்குமா? எனக்குப் பரீட்சையில் வெற்றி கிடைக்குமா? எனக்கு அன்னையின் அருள் துணைபுரியுமா?" என்றும் உருக்கத்தோடு கேட்டிருந்தார்.

பொல்லாங்கால் பாதிக்கப்பட்டுப் புகலிடம் தேடி வருபவர்களுக்கு, பொன்மயமான ஒரு புலர் பொழுதை விடியவைப்பவர் அல்லவா அருள்மிகு அன்னை? வாசகரின் கேள்வியை வேள்வியாகச் செய்ய நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

"நம்மிடமும், நம் பெற்றோர்களிடமும் உள்ள குறைகள் நம் எதிர்காலமாக அமைகின்றன. நம்முடைய நிகழ் காலத்தில் ஏற்படுகின்ற துன்பங்களுக்கும் அந்தக் குறைகளே காரணங்களாகும்.

நம்மை வாட்டும் துன்பங்களை விலக்கவும், எதிர்கால வாழ்வைச் சிறப்பாக வகுக்கவும், அந்தக் குறைகளைக் கண்டுபிடித்து, அவற்றை அடியோடு நீக்கிவிட வேண்டும். சில குறைகளை அறிந்து கொள்ள முடியும்; சில குறைகளை அறிந்து கொள்ள முடியாமலே போகலாம். அதைப்போல் சில குறைகளால் வரும் துன்பங்களை நம்மால் அடையாளம் புரிந்து கொள்ள முடியும். பலவற்றுக்குத் துன்பங்கள் மட்டும்தான் புரியும்; ஆனால் அந்தத் துன்பங்களைத் தூண்டி விட்ட முறைகள் என்ன என்பது புரியா.

குறைகள் எந்த வகையாக இருந்தாலும் அவற்றை நம்மால் அழிக்க முடியாது; மற்றவர்களாலும் அழிக்க முடியாது. அவற்றை அழிக்கும் ஆற்றல் அன்னையின் அருளுக்குத்தான் உண்டு. நம்பிக்கையோடும், பக்தியோடும் அன்னையின் அருளை நாடி, அந்தக் குறைகளை நீக்கும்படி வேண்டிக் கொண்டால், அன்னை அந்தக் கோரிக்கையை உடனே நிறைவேற்றி வைப்பார். அல்லது நம் குறைகளை எல்லாம் அன்னையின் பாதாரவிந்தங்களில் ஒப்படைத்து விட்டால், அவர் அவற்றை இருந்த சுவடு தெரியாமல் போக்கி அருள்வார். நம் நிகழ்காலமும், எதிர்காலமும், மகிழ்ச்சிகரமாக அமையும்; நம்மை அழுத்தி வந்த பளு நீங்கும்; நடக்காது என்று கைவிடப்பட்டவை நடக்கும்; "வாராது" என்று விட்டு விடப்பட்டது தன்னாலேயே வந்து சேரும். நம்மிடம் உள்ள குறைகளை விலக்கிக் கொள்ளும் முயற்சியை தினமும் முறையாகச் செய்து வந்தால், வாழ்க்கையில் ஏற்பட்டச் சிக்கல்கள் விலகி இன்பம் பெருகும்" என்பதுதான் என் கடிதம்.

அதற்குப் பிறகு சில நாட்கள் சென்றன. அந்தப் பெண்ணிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. அவர் அதில், "என் வாழ்க்கையில் கணக்கற்ற பிரச்னைகள் இருந்த போதிலும், அன்னையை உளமார ஒரு சில நிமிடங்கள் நினைத்த மாத்திரத்தில் நான் லேசாகி விடுவதையும், என் மனம் அமைதியில் ஆழ்ந்து போவதையும் உணர்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அவர் எழுதிய கடிதத்தில், தாமும் தம் குடும்பத்தில் உள்ள அனைவரும் ஸ்ரீ அன்னை தியான மையத்திற்கு வந்திருந்ததாகவும், ஸ்ரீ அரவிந்தர், அன்னையைத் தரிசித்ததாகவும் குறிப்பிட்டிருந்ததோடு, தம் வாழ்வில் அன்னையின் படம் வந்த நாளிலிருந்து பல முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்துள்ளதாகவும், அவற்றை எனக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பதாகவும் எழுதி விட்டு, அவர் வாழ்வில் நடைபெற்ற அந்த புதிய நிகழ்ச்சிகள் பற்றியும் விளக்கி இருந்தார்.



அந்தப் பெண் கால்களை ஊன்றி நடக்க இயலாமல் மிகவும் துன்புற்று வந்தார் என்பதை நான் முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு மருத்துவமனையில் அந்தக் கால்களுக்கு வைத்தியம் செய்து கொண்ட வகையில் ரூபாய் 3000 செலவாயிற்று. அந்தத் தொகையை அவருடைய வங்கியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான ஒரு சலுகை அமலில் இருந்தது. ஆனால் அந்தத் தொகையைச் சென்னையில் உள்ள பொது மேலாளரின் ஒப்புதலைப் பெற்ற பிறகே அடைய முடியும்.

அந்த ஒப்புதலைப் பெறுவதற்கான மனுவை 30-03-83-க்குள் அனுப்பிவிட வேண்டும். ஆதலால் அந்த மனுவை 20ஆம் தேதியே எழுதி, அதைச் சென்னைக்கு அனுப்ப வேண்டிய ஏற்பாட்டைச் செய்து தபால் பிரிவில் கொடுத்துவிட்டு, அந்தப் பெண் நீண்ட விடுப்பில் சென்று விட்டார்.

அவர் அக்டோபர் மாதம் விடுப்பு முடிந்து வேலைக்கு வந்தார். தம்முடைய ஆசனத்திற்குச் சென்று அவர் அமர்ந்த பொழுது, சென்னைக்குப் போயிருக்க வேண்டிய தம்முடைய மனு தம் மேஜையின் மீது வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ந்தார். தபால் பிரிவில் சேர்க்கப்பட்ட அந்த மனு எப்படியோ அவர் மேஜைக்குத் திரும்பி விட்டிருந்தது. ஏன்? எதனால்? அவருக்குப் புரியவில்லை.

உடனே அவர் ஒரு கடிதத்தை எழுதி நடந்ததைக் குறிப்பிட்டு அந்த மனுவை ஏற்று ஒப்புதல் அளிக்க வேண்டும் எனக் கேட்டு, பொது மேலாளர் அலுவலகத்துக்கு அதை அனுப்பி வைத்தார். "காலம் கடந்து அனுப்பப்படும் அந்த மனுவை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். என்றாலும் ஒரு கடைசி முயற்சியைச் செய்து பார்க்கலாமே?" என்ற எண்ணத்தில்தான் அவ்வாறு செய்தார். மேலும் அவர் நம்பிக்கையை அடியோடு குலைக்கும் வண்ணம், அவர் கோரிய தொகை மிக அதிகம் என்றும், அதனால் அந்தத் தொகை அவருக்குக் கிடைக்காது என்றும் சென்னையில் உள்ள சிலர் மூலம் செய்தி கிடைத்தது.

அந்தச் செய்தியைக் கேட்டவுடன் அந்தப் பெண் வீட்டுக்குச் சென்று அன்னையை நினைத்து, "எனக்கு வந்துள்ள சோதனைகளைப் பார்த்தீர்களா?" என்று கதறி அழுதார். அதற்குப் பிறகு அவர் ஒவ்வொரு நாளும் அலுவலகத்திலிருந்து திரும்பியவுடன் அந்தச் சிக்கலை அன்னையிடம் சமர்ப்பித்து விட்டுக் கண்ணீர் சொரிவார்.

இந்த இடத்தில் — அவர் இதற்கு முன்னால் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். "வணங்குவதற்கு அன்னையின் திருவுருவப்படம் ஒன்று வேண்டும்" என்று அவர் கடிதத்தில் கோரியிருந்தார். நான் உடனே அன்னையின் படம் ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்தேன். அந்தப் படம் அவருக்குக் கிடைத்த தேதி: 27-11-83. அன்று மாலையே அவர் அதற்குச் சட்டம் போட்டு வீட்டில் மாட்டிவிட்டார். அன்னையின் அந்தப் படத்தின் எதிரே அமர்ந்துதான், நான் மேலே குறிப்பிட்டிருந்தபடி, பிரார்த்தனை செய்து வந்தார் அவர்.

ஒரு வாரம் சென்றது. எதிர்பாராதவிதமாக அவருக்குத் தபாலில் ஒரு செக் வந்திருந்தது. அதில் அவர் வைத்தியச் செலவுக்காகக் கேட்டிருந்த ரூபாய் மூவாயிரத்தையும் சென்னை அலுவலகம் அனுப்பி வைத்திருந்தது.

காலம் கடந்து அனுப்பிய மனுவை எப்படி ஏற்றுக் கொண்டார்கள்? கோரிய தொகை வரம்பை மீறியிருந்தாலும், அதைக் குறைக்காமல் எப்படி வழங்கினார்கள்? சாத்தியமே இல்லாத ஒரு பிரச்சனை எப்படிச் சாதனையாக மாறியது?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில்: அன்னையின் அருள்!

அந்தப் பெண் இப்படித்தான் உள்ளம் உருகி எனக்கு எழுதியிருந்தார்.





அந்தப் பெண் பணிபுரியும் வங்கியிலேயே பணிபுரிந்து வருபவர் இன்னொரு பெண்மணி, அவர் திருமணமானவர். அவருடைய கணவருக்கு மத்திய அரசு அலுவலகம் ஒன்றில் வேலை. அந்தப் பெண்மணியின் பிறந்த வீட்டுக்காரர்களால் அவருக்கும், அவர் கணவருக்கும் மனத் தாங்கல். அதனால் தினசரி சண்டை சச்சரவு, அடி-உதை, குடும்பமே குழப்பமாகவும், கூச்சலாகவும் நிர்த்தூளிப்பட்டது.

அந்தப் பெண்மணி இந்தச் சோகக் கதையை அன்னையின் அன்பராகிய தோழியிடம் கூறி வருந்தினார்.

அதைக் கவனமாகக் கேட்ட அந்த அன்பர் அன்னையைப் பற்றியும், அன்னையிடம் செய்து கொள்ளும் பிரார்த்தனையால் ஏற்படும் நற்பலன்கள் பற்றியும் துன்பத்தில் வாடும் தன் தோழிக்கு எடுத்துரைத்தார். தம் பிரச்சனை தீர வேண்டும் என வேண்டிக்கொண்டு அன்னைக்கு ஒரு சிறு காணிக்கையை அனுப்பி வைக்குமாறு ஆலோசனை கூறி, தம்மிடம் இருந்த அன்னையின் பிரசாதத்தையும் அவருக்கு அளித்தார்.

ஆறு வாரங்கள் சென்றன. ஒரு நாள் அந்தப் பெண்மணி தம் தோழியிடம், தம் வீட்டுப் பிரச்னை நல்ல முறையில் தீர்ந்து விட்டதாகவும், தாமும் தம் கணவரும் சுமுகமாக இருப்பதாகவும் கூறினார்.

அதைக் கேட்ட அன்னையின் அன்பருக்குப் பெரு வியப்பு. "அன்னையின் அருள் கணவன் மனைவி சிக்கலை இத்தனை விரைவாகத் தீர்த்து விட்டதே!" என்று மகிழ்ந்தார். அது பற்றி எனக்கும் எழுதினார்.

அன்னையின் அருள் மின்சாரத்தைப் போன்று விரைந்து செயல்பட வல்லது. "பிரார்த்தனை என்னும் ஸ்விட்சைப் போட்டதும் அன்னையின் அருளொளி அக்கணமே பரவிப் படர்கிறது".

3

அதே பெண்ணின் தங்கை கரூரில் உள்ள P&T அலுவலகத்தில் பணி புரிந்து வந்தார். அந்த வேலைக்காகத் தம் குடும்பத்தை விட்டு அங்கு போய்த் தனியாக வசித்து வந்தார் அவர். தனிமையும், பெண்மையும் தொல்லை தரக் கூடியவை. அவருக்கும் அந்த மாதிரியான தொல்லைகள். அவர் அந்தத் தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி, சொந்த ஊருக்கு மாற்றலாகிப் போவதுதான். அவர் அதற்கு முயன்று பார்த்தார். மாற்றல் அத்தனை சுலபமாகக் கிடைக்கும்போல் தெரியவில்லை. அதனால் மனம் நொந்துபோன அவர், தம் அக்காளிடம் வேலையை விட்டுவிடப் போவதாகக் கூறினார். வேலை கிடைப்பது அரிதாக உள்ள இந்த நாளில், தம் தங்கை வேலையைக் "கை கழுவி" விடுவது அக்காளுக்குக் கொஞ்சம்கூட உடன்பாடாக இல்லை. "கரூரிலிருந்து சொந்த ஊருக்கு மாற்றல் கிடைக்க வேண்டும் என்று அன்னைக்குப் பிரார்த்தனை செய்து கொள்" என்று கூறி அன்னையின் அருளால் தம் வாழ்வில் கிடைத்த நன்மைகளை விவரித்து, தங்கையிடமிருந்து ஒரு சிறு தொகையைக் காணிக்கையாகப் பெற்று அனுப்பி வைத்தார் அவர்.

அதற்குப் பிறகு மிக விரைவில் மற்றவர் அதிசயிக்கும் வண்ணம் அவருடைய தங்கைக்கு மாற்றல் கிடைத்தது. இப்போது அக்காளும், தங்கையும் சொந்த ஊரிலேயே வேலைப் பார்த்துக் கொண்டு வருகிறார்கள்.

4

பம்பாயைச் சேர்ந்தவர் அந்த "அமுதசுரபி" வாசகர். அன்னையின் மகிமையைப்பற்றி தாங்கள் எழுதி வரும் கட்டுரைகளைத் தொடர்ந்து படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருத்தி. அதற்கு முன் அன்னையைப் பற்றி ஏதும் அறியாதவள் நான். அன்னையின் அருளால் பலருடைய சங்கடங்கள் தீர்ந்து



நன்மைகள் பெருகுவதைப்பற்றித் தங்களின் கட்டுரைகள் மூலம் அறிந்த நான், என்னுடைய வாழ்க்கையிலும் பிடித்திருக்கிற கஷ்டங்கள் நீங்கி நன்மைகளைப் பெற வேண்டும் என்ற உந்துதலோடு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்" என்று தொடங்கி, எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார் அவர். அதை ஏப்ரல் 83இல் எழுதியிருந்தார்.

அந்த வாசகர் தம் கடிதத்தில் இரண்டு முக்கியமான பிரச்சனைகளைப்பற்றி எழுதியிருந்தார். 1. அவருக்கு வசதியான இடத்தில் திருமணமாகி இருந்தாலும், அவருடைய பெற்றோர் வறுமையால் வாடிக் கொண்டிருப்பது அவருக்கு மிகவும் வேதனை அளிக்கிறது. அவரின் தந்தைக்கு ஒரு நிரந்தரமான வேலை கிடைத்தால் பிறந்த வீட்டில் ஓரளவு வறுமையின் பிடி குறையும். 2. புகுந்த வீட்டில் இவருக்கு ஓர் "இமேஜ்" கிடைத்தாக வேண்டும். அது அவர் வேலை பார்த்துச் சம்பாதிக்கத் தொடங்கினால் மட்டுமே கிடைக்கும். அவர் சம்பாதித்துத்தான் ஆக வேண்டும் என்ற நிலையில் அந்தக் குடும்பமும் இல்லை என்றாலும், அவர் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதால், அவரை மனது நோக நடத்தும் மாமியாரும் மற்றவர்களும் மதிப்பதற்கு, அவர் எதிர் நோக்கும் வேலை மிகவும் உதவும். அதற்காகப் பரீட்சை எழுதினார். பாஸாகவில்லை. மீண்டும் பரீட்சை எழுதவேண்டும்.

பிறகு அதில் பாஸாக வேண்டும். தந்தைக்கு ஒரு வேலை வேண்டும். அவருடைய மொத்த பிரச்சனைகளுக்கும் விதைகள் இவை தாம்.

"அன்னையிடம் உண்மையான நம்பிக்கையும், பக்தியும் கொண்டு நம்முடைய மனக்குறைகளை எடுத்துக் கூறி, அவற்றை விலக்கி அருள வேண்டும் என்று தினமும் கேட்டுக் கொண்டால், அன்னை அவற்றை விலக்கி நல்ல வழியைக் காட்டுவார். "உண்மையான நம்பிக்கை" என்பது, "அன்னையின் அருள்" எத்தகைய துன்பங்களையும் விலக்கும். கேட்டவற்றை வரையில்லாது வழங்கும்" என்று நம்புவது. உண்மையான

பக்தி என்பது, நம்மையும், நம் அறிவையும், நம் சக்தியையும் சாராது, அன்னையையும், அன்னையின் அருளையும், அன்னையின் சக்தியையும் சார்ந்திருப்பது. உங்களுடைய கோரிக்கைகளை அன்னை பூர்த்தி செய்ய வேண்டுமானால், மேற்கூறியபடி அன்னையை வணங்க வேண்டும்” என்று நான் விளக்கமாக அவருக்குப் பதில் எழுதினேன்.

நவம்பர் 83இல் அவர் எனக்கு மீண்டும் கடிதம் எழுதி இருந்தார். தம்முடைய இரண்டு கோரிக்கைகளையும் அன்னை பூர்த்தி செய்து விட்டார் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கடிதத்தில் இவர் இப்படி எழுதி இருந்தார். “அன்னையின் அருளால் கடந்த ஜூலை மாதம் பி.எட்., தேர்வு எழுதக் கல்லூரியிலிருந்து விண்ணப்பத்தாள் வந்தது. நான் அன்னையை வேண்டிக் கொண்டு அதை அனுப்பி வைத்தேன். பிறகு தேர்வு எழுதினேன். பத்து நாள்களுக்கு முன்னால் நான் தேர்வில் வெற்றி பெற்ற செய்தி கிடைத்தது”.

“அந்தச் செய்தியைக் கேட்டதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இனி எனக்கு வேலை காத்திருக்கிறது. இதுவரை நிலையாக ஒரு வேலை இல்லாமல் இருந்து வந்த என் தந்தைக்கும் தற்போது நிலையான வேலை கிடைத்துள்ளது. அதன் மூலம் என் தாய்க்கும், தந்தைக்கும் இரண்டு வேளைகளாவது உண்ணும் அளவுக்கு ஊதியம் கிடைக்கும். அன்னையின் அருள் என் பெற்றோரின் வாழ்க்கையில் மேலும் மேலும் நன்மைகள் பெருகவும், அவர்கள் இருவரும் இங்கு வந்து சேரவும் துணை புரியவேண்டும் என்பதே என் பிரார்த்தனை”.

ஆழமான பிரார்த்தனைக்கு அன்னையின் அருள் பூரணமாகக் கிடைப்பது உறுதி.

★★★



# வாழ்க்கையை நம் வழிக்கு கொண்டு வரும் இரகசியங்கள்

கர்மயோகி

**‘வாழ்க்கையை நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான மனோபாவங்களும், செயல்பாடுகளும்’**

என்ற தலைப்பில் உள்ள 50 கருத்துகளில் சிலவற்றை விளக்கும் கட்டுரையிது.

முன்னுரை: Life Response மனிதனின் தனித்தன்மை, நாம் உருவாக்கிய கருவிகள், தோற்றம், வாழ்வு தரும் சவால்கள், தீர்வில்லாதப் பிரச்சனை, இன்முகம், புதுமுயற்சி, அதிகாரம், இடையறாத முன்னேற்றம், இரகஸ்யம், நேர்த்தியான வேலை, அவசரம், உடனே கிடைக்கும் பலன், உள்ளெழுச்சி, நிகழ்ச்சியில் ஆழ்ந்த உள்ளர்த்தம், அளவோடு தரும் விவரம் போன்ற 50 கருத்துகள் அடங்கிய கட்டுரை அது.

**1. வாழ்க்கை தரும் சிரமங்களையும், சவால்களையும் கண்டு மிரளக் கூடாது. தைரியமாக அவற்றை நாம் எதிர்கொள்ள வேண்டும். வாழ்க்கை தரும் சவால்களை நாம் மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டோம் எனில் பெரிய வெல்ல முடியாத சிரமமாகப்பட்டது நம் கட்டுப்பாட்டிற்குள் வருவதைக் காணலாம்.**

நாமறிந்தது நம் சொந்த வாழ்க்கை. சுற்றி உள்ளவர் வாழ்க்கை கண்ணில்படும். மனத்தில் படாது. சவால்கள் மனிதனிடமிருந்து எழும். கல்லூரியில் படிக்கும் 17 வயது மாணவனை நிறுத்தி அவன் கடிகாரத்தைத் தரும்படி ஒரு போக்கிரி கேட்டது அது போன்றது. வெளிநாட்டுப் பிரயாணத்தில் பாஸ்போர்ட் தொலைவது சந்தர்ப்பம் தரும் சவால். ரிஷிகேசத்தில் தமிழ் மட்டும் தெரியும் பெண் உடனிருந்தவர்களை விட்டுப் பிரிந்து வழி தவறியது ஆபத்தான சவால். முதல் முறை வாழை பயிரிட்டவனுக்கு குலை தள்ளும் தருவாயில் புயல் வரப் போவது இயற்கை தரும் சவால். எந்த இளைஞனை நெடுநாள்

காத்திருந்து, பல எதிர்ப்புகளைக் கடந்து உள்ளம் குழைந்து ஊன் உருகி மணந்தாளோ அவன் 'உன் தகப்பனார் பணத்திற்காக உன்னை மணந்தேன்' என்பது வெற்று இதயம் அன்பை அபரிமிதமாகக் கருதுபவளுக்குத் தரும் நிரந்தர ஏமாற்றம். சந்தர்ப்பங்களுக்கு பலியாவது சகஜம். தைரியமாக எதிர்கொண்டு நிதானம் மிகுந்த வலிமையால் வெல்பவர்கள் அந்த ஒரு சிரமத்தை மட்டும் கடப்பவர்களில்லை. வாழ்வின் அந்த சிரமம் தரும் அம்சத்தையே வெல்பவர்.

முயற்சிக்குரியவை திறமை தரும். எதிர்பாராத ஏமாற்றம் கிடைத்தற்கரிய ஞானம் தரும். நிதானமிழந்து உடையலாம். பொறுமை இழந்து உள்ளதை இழக்கலாம். ஏதோ ஓர் அளவில் சமாளிக்கலாம். சுமார் 100 ஆண்டிற்குமுன் பருவமழை தவறுவதுண்டு. ஓராண்டு தவறினால் மனிதன் விழித்தெழுந்து உள்ளதைக் கொண்டு பரிமாறிக் கொண்டு சமாளித்து விடுவான். இரண்டாம் ஆண்டும் பருவம் தவறினால் பலர் ஊரை விட்டு வேலைதேடி வெளியேறுவர். 12 ஆண்டுகள் தொடர்ந்தும் பருவம் தவறியபின் ஊரையே காலி செய்து வெளியே போய் பிழைத்து, நிலைமை மாறியபின் திரும்பி வந்து பயிர் செய்த நாட்களுண்டு. அதுபோன்ற ஊர்கள் நெடுநாள் கழித்து நாட்டில் முதன்மை பெற்று, தலைவர்களை உற்பத்தி செய்து, பண்பிற்குறைவிடமாவது வழக்கம்.

சிரமம் வந்தால் நம் குறை அனைவருக்கும் தெரியும். சிரமம் அதிகமானாலும், தொடர்ந்தாலும், நம் சிரமங்களை நாமே உணர முடியும். உணர்ந்த சிரமம் உயர்ந்த திறமையாகும். எவரும் உதவாத நிலையில் தன்னம்பிக்கை வளரும். எவரும் எவர்க்கும் உதவ முடியாத நிலையில் நட்பிற்காகவும், உறவைப் பாராட்டியும், மனிதாபிமானத்திற்கும் தேடிவந்து உதவும் உத்தமருண்டு என்று காண்பது இதயம் என்றுமில்லாத பெருமையடைய உதவும். உதவாக்கரைப் பொருள்கள் உதவும் வகையை அறியும் நேரம் அவை. நம்மைச் சுற்றியுள்ளவரில் நல்லவர் கெட்டவர் பிரிந்து தோன்றும். நல்லவர் செய்யும் கெட்டதும், கெட்டவர் செய்யும் நல்லதும் திருக்குறளின்



பெருமையை உணர்த்தும். சோவியத் யூனியனின் ஒரு சிப்பாய் போருக்குப் போய் பல ஆண்டுகள் கழிந்து உயிருடன் திரும்பினான். மனைவி, மக்களிடையே இருந்த மகத்தான பிரியம் வளர்ந்திருப்பதைக் கண்டு மலர்ந்தான். ரஷ்ய மொழியில் பல இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட்டன. அவனுக்குத் தாய்மொழி ரஷ்ய மொழியினின்று வேறுபட்டது. நளவெண்பாவை ரஷ்ய மொழியில் படித்தவன். தமயந்தியைப் போற்றினான். அவன் மனைவியின் பெருமையை தமயந்தியின் அன்பு எடுத்துக்காட்டியது. உள்ளம் உருகி தன் தாய் மொழியில் நளவெண்பாவை மொழி பெயர்த்து பூரணம் பெற்றான். சவால் ஆத்மா பெறும் அரிய வாழ்வின் சந்தர்ப்பம்.

கடத்தல்காரர்களுடைய கப்பல் சிறையிலிருந்து தப்பிய கைதியைக் காப்பாற்றுகிறது. கைதி கப்பலோட்டும் திறன் மிகுந்தவன். அனைவரும் போற்றுகின்றனர். ஒரு தீவில் இறங்கி சமைத்துச் சாப்பிடும் பொழுது கைதியின் கால் சுளுக்கிக் கொள்கிறது. அரை அங்குலம்கூட பிரள முடியவில்லை. அனைவரும் உதவுவது கைதிக்கு வியப்பாக இருக்கிறது. கடத்தல்காரரிடம் கருணையைக் காண்கிறான். கைதி தன் சொந்தக் காரணத்திற்காகவும், சுளுக்கின் வலிக்காகவும் தீவில் தங்க முடிவு செய்கிறான். அனைவரும் அவனை உடன் வரும்படி அழைத்து முடியாத பொழுது, போதுமான உணவு கொடுத்துவிட்டுப் புறப்படுகின்றனர். ஒருவர் அவன் குணமடையும்வரை அவனுடனேயே தங்க முன் வருகிறார். அவர்கள் செய்யும் தொழில் கடத்தல், திருடு. அவன் மனம் இரக்கத்தாலும், உதவி மனப்பான்மையாலும் நெகிழ்வதைக் கண்டு கைதி கண் கலங்குகிறான். உதவியை மறுத்துவிட்டு தான் தேடிப் போகும் புதையலைக் கண்டு எடுத்து மீண்டும் அவர்களை சந்தித்து அனைவருக்கும் தங்கக்காசு பரிசும், உதவ முன்வந்தவனுக்கு ஒரு அழகான படகும் பரிசளிக்கிறான். வாழ்வின் சவாலை ஏற்கும் நேரம் புது உலகம் புறப்பட்டு உலகம் காணாததை அளிக்கிறது. சவாலை எளிய மனிதர் பலர் ஏற்கிறார்கள். இலட்சியவாதிக்கு சவால் எழுந்தால் அவன்

சவாலுக்குரிய இலக்கணத்துடன் அதை ஏற்றால், சிரேஷ்ட புருஷன் எனக் கூறும் உத்தமனாக, உயர்ந்த நிலைகளை இயல்பாக எட்டிப் பிடிக்கும் சாதனைக்குரியவனாக, நாட்டிற்குத் தலைமை தாங்கும் தகுதி பெறுபவனாக, கவியாக, இராஜதந்திரியாக, மாறுகிறான். வாழ்வு மனிதனை உயர்த்தும் முறைகளில் சவால் விடுவது ஒன்று.

2. தீர்வு இல்லாத பிரச்சனையில்லை என நமக்குத் தெரிய வேண்டும். மேலும் பெரும்பாலான பிரச்சனைகட்குள்ளே தீர்விருக்கின்றது.

பெண்ணிற்கு வரன் தேடுபவர்கள், இனிமேல்தானா அவன் பிறக்கப் போகிறான் என்பார்கள். பிரச்சனையென ஒன்றிருந்தால், தீர்வு என ஒன்றிருக்கும் என்பது வாழ்க்கைச் சட்டம். தீராத பிரச்சனை என நாம் கேள்விப்படுவது அதைத் தீர்க்கப் பிரியப்படாதவர் கூறுவது. சம்பாதிக்கும் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க விரும்பாத பெற்றோர், வரன் அமையவில்லை என்பார்கள். நிலத்தைப் பயிரிட சோம்பேறியானவர் எனக்குப் பணமில்லை, பயிர் கூடி வரவில்லை, உதவியில்லை என்பார். பரீட்சைக்குப் படிக்கப் பிரியமில்லாத மாணவன் சீட்டாடுவான். பேப்பர் படிப்பான். ஒரு நாளைக்கு 3 சினிமா பார்ப்பான். எனக்கு நேரமில்லை என்பான். கடை நடத்துவது, ஒரு ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்வது, குடும்பம் செய்வது, வெளிநாட்டுப் பயணம், தேர்தலில் ஜெயிப்பது போன்ற எந்தக் காரியத்திற்கும் உழைப்பு, பொறுப்பு, திறமை, தெம்பு, முயற்சி தேவை. சாதிப்பவர்கள் அனைவரும் அப்படிப்பட்டவர்களே. மாமனார் தொழில் வைத்துக் கொடுத்தால் ஊதாரியான மருமகன் முதலை அழித்துவிட்டு சாக்கு சொல்வது வழக்கம். அவனுடைய பிரச்சனைக்குத் தீர்வில்லை. பெரிய இயக்கங்களைப் பெரியவர்கள் ஏற்படுத்துகிறார்கள். காவிரியில் மேட்டூரில் அணை கட்டியது, பெரும் எதிர்ப்பின் பின்னும் நெய்வேலியை நிர்மாணித்தது, அரசியலில் பதவியை எட்டியது,



பல்கலைக்கழகம் சொந்த முயற்சியால் நிறுவுவது, வெளிநாட்டில் தொழில் ஆரம்பிப்பது, போன்றவை சாதனைகள். அமெரிக்காவைக் கண்டுபிடித்து, காட்டை நாடாக்கி, உலகத் தலைமை பெற்றது அரசியல் சாதனை. ஜெர்மனி உலகப் போருக்குப்பின் இரண்டாகப் பிரிந்தது. நான்கு வல்லரசுகளால் ஆளப்பட்டது. ஆனால் இன்று ஐரோப்பாவில் வளம் மிக்க நாடு ஜெர்மனி. பிளவுபட்டது மீண்டும் ஒன்று சேர்ந்து, எழுந்த பிரச்சனைகளைத் தீர்த்து, செல்வம் பெருகியுள்ளது. இந்தியாவிற்கு சுதந்திரம் வந்தது பெரியது. இன்று நாம் காணும் சுபீட்சம் அதைவிடப் பெரியது. முடியாததில்லை. தீர்வில்லாதப் பிரச்சனை இல்லை என்பவர்கள் ஆண்டவனை வாழ்வில் கண்டவர்கள். அவர்கள் எதையும் தீர்ப்பர்.

Y2K ஏற்பட்டவிதம், தீர்க்க முடியாது என உலகம் கைவிட்டது நாமறிவோம். அது தீர்ந்த விதமும் நாம் அறிவோம். எந்த வழியும் தோன்றாத நிலையில் தீர்ப்பது என முடிவு செய்து, எவையெல்லாம் முடியுமோ அவையெல்லாம் செய்து முடித்தால், அது முடிவதற்குள் நாம் தேடும் வழி தென்படும் என்று ஓர் சட்டம். என் கையால் எந்தத் தவறும் செய்ய மாட்டேன் என்பவர் எந்தப் பிரச்சனையையும் தீர்க்க முடிவு செய்தால், அவருக்குப் புரியாததை அடுத்தவர் கூறுவர். முனைந்தால் முடியாததில்லை என்பதை வெற்றி பெற்றவர் அறிவார். அரசியலில் முன்னுக்கு வர வேண்டும், சினிமாவில் கதாநாயகனாக வேண்டும், பெரும் பணம் சம்பாதிக்க வேண்டும் எனப் படிப்பறிவில்லாத இளைஞர் முடிவு செய்து தலைமைக் காரியாலயம், ஸ்டுடியோ, பணக்காரக் குடும்பத்தில் அழையாத விருந்தினராக ஆண்டுக்கணக்காக தவமிருப்ப-துண்டு. அவர்களில் சிலர் பெரு வெற்றி பெறுவதுமுண்டு. இது விடாமுயற்சி. அறிவுடை முயற்சிக்கு அதிகப் பலனுண்டு. சூட்சும அறிவு தரும் பெரும்பலன் ஏராளம். உடலுழைப்பைப் போல் மனம் இலட்சியமே குறியானால், தேடிப் போகும் சிறிய வெற்றி, பெரிய வெற்றியாக மாறி நாடியும் வரும். கிராமத்துச்

சிறுவன் சிறுவயது முதல் பிரதம மந்திரியாக உருக்கமாக உழைத்து, 60-ஆம் ஆண்டில் இலக்கைப் பெற்றான். இலட்சியவாதிகட்கு மட்டும் தீவிரமில்லை. கள்வன், கடத்தல்காரன், இலஞ்சம் வாங்குபவன், எத்தன், புரோக்கர், ஏமாற்றுப் பேர்வழிகட்கும் இக்குறிக்கோள் உண்டு. அவர்களில் சிலர் பெறும் வெற்றி அவர் துறை பெறுவதில்லை, முயற்சி பெறுவது.

இரவு பகலாக ஒரு விஷயத்தை மனம் நாடும் பொழுது அத்துறையில் உள்ள அனுபவம் வாய்ந்த நிபுணர்கட்கும் புரியாததவைப் புரியும். 40 HP பம்ப்பை பிரித்து எடுத்த அனுபவமுள்ள இன்ஜினீயர் ஒரு கட்டத்தில் மேற்கொண்டு என்ன செய்வது எனத் தெரியாமல் ஒரு நாள் வேலையை நிறுத்தினார். அவர் மூன்று ஆண்டிற்குமுன் அங்கு வந்து வேலை செய்த பொழுது அவருக்கு உதவியவர் பம்ப்பைப் பிரித்ததை உன்னிப்புடன் கவனித்த சிறுவன் அதை நினைவு வைத்திருத்திருந்தான். அவன் அதைக் கூறிய பொழுது இன்ஜினீயர் ஆச்சரியப்பட்டு வேலையை முடித்தார். ஆண்டவனின் படைப்பு அர்த்தமற்ற சிறிய காரியங்களில் அற்புதமாக வெளிப்படும் என்பது பகவான் கூற்று. நாம் கண்ணிருந்தும் குருடராவோம் என்கிறார் பகவான். வாழ்வுக்கு ஆயிரம் கண்களுண்டு. ஆயிரமாயிரம் சிந்தனைகளுண்டு. அனந்தகோடி திறமைகளுண்டு. நாம் கண்டதையே காண்கிறோம். மனம் விசாலப்படுவதில்லை. அமெரிக்கத் தாயார், 15 வயது பெண் எதையும் செய்ய மறுக்கிறாள். அவளைத் திருத்த முடியவில்லை என ஒரு Psychiatrist மனோதத்துவ டாக்டரிடம் கொண்டு போனார். டாக்டர் பெண்ணை ஊன்றிக் கவனித்தார். குறை மகளிடமில்லை என்பதைக் கண்டு, தாயாரை அறைக்கு வெளியே அழைத்துப் போனார். பெண் டான்ஸ் ஆட ஆரம்பித்தாள். டாக்டர் அவள் மனநிலையை அறிந்து அவளை அவளிஷ்டப்படி விடச் சொன்னார். பிரசித்திப் பெற்ற டான்சராகினாள் பெண். குழந்தைகளைப் புரிந்து கொள்ளாமல் பிரச்சனையைப்



பெற்றோர் உற்பத்தி செய்து தீரவில்லை என்பது இது. காமராஜர் முதன் மந்திரியாக இருந்த பொழுது தீராத பிரச்சனைகளான சிறியது பெரியது என 100-க்கு மேற்பட்டவை அவரால் தீர்க்கப்பட்டன. சமீபத்தில் காமராஜ் ஒரு சகாப்தம் என்று வெளிவந்த நூலில் அவை எழுதப்பட்டுள்ளன. ஒரு நாட்டில் நிலமில்லாததால் கடலுக்கு அணைகட்டி தேங்கியுள்ள நீரை காற்றாடிகளால் இறைத்துக் கடலில் செலுத்தி நிலத்தை உற்பத்தி செய்து விவசாயம் செய்து உலகில் விவசாயத்தில் முதன்மையான நாடானார்கள். அந்த நாடு முழுவதும் கடலுள்ளிலிருந்து விடுவிக்கப்பட்டதாகும். மனிதன் படிக்கிறான். சந்திர மண்டலம் போகிறான். கார் ஷெட்டில் ஆரம்பித்த கம்பெனி உலகில் மிகப் பெரிய பணக்காரனை உற்பத்தி செய்தது. 500 ஆண்டுகட்குமுன் உலகைச் சுற்றி வந்தான். எவரெஸ்ட் உச்சியை எட்டினான் மனிதன் எனில் எது தீராத பிரச்சனை? தீர்க்கப் பிரியப்படாத பிரச்சனையே தீராதது.

**3. அன்னையின் கருத்துப்படிப் பார்த்தால் நாம் வாழ்க்கையை இன்முகத்துடன் வரவேற்றால், வாழ்க்கையும் நம்மை இன்முகத்துடன் வரவேற்கும்.**

கண்கள் ஆன்மாவின் வாயில். வாய் வயிற்றை எடுத்துக் கூறும். நெற்றி அறிவின் உறைவிடம். முகம் முழு ஜீவனைப் பிரதிபலிக்கும். முகராசி என்பது வழக்கு. கை செயலைக் குறிப்பதால் கைராசி என்ற வழக்கு ஏற்பட்டது. ஆத்மாவைப்பற்றி எவரும் அதிகமாகப் பேசுவதில்லை. ஆன்மா என்ற சொல்லே காதில் படாது. அன்னைக்குரியது ஆன்மா, அதுவும் வளரும் ஆன்மாவான சைத்தியப் புருஷன். மலர்ந்த முகம் வளரும் ஆன்மாவுக்குரியது. நம் வழக்கிலும், மரபிலும் கருதப்படாதது. அன்னையை அறிந்தவர்கள் நினைவில் கொண்டிருப்பது அவர்களுடைய பரந்த விசாலமான புன்சிரிப்பாகும். 80 வயதுவரை அன்னை தூங்கவில்லை. அவர்களுக்குப் படுக்கையென்று ஒன்றில்லை. 80-க்கு மேல் நாற்காலியிலேயே ஒன்றரை மணிநேரம் தூங்கினார்கள். உடலில் தெம்பு

கொப்பளித்துப் பரிமளித்தது. நம்மைச் சுற்றியுள்ள 40 அல்லது 50 அல்லது 100 பேரை நினைவுபடுத்தினால் இயல்பாக சிரித்த முகம் உள்ளவர் ஓரிருவர் இருக்கலாம். இல்லை என்று காண்பவர் பலர். புன்முறுவல், சிரித்த முகம், மலர்ந்த இதயம் என்பவை என்ன என்று நாம் அறிந்தால், அது நமக்குண்டா இல்லையா எனத் தெரியும். மலர்ந்த இதயம் சிரித்த முகமானால் மகத்தான சாதனைகளைப் பெறும். சிறு குழவிப் பருவத்தில் எல்லாருக்கும் உரியது. வளர்ந்த பிறகு தவறாமல் தேய்வது. ஆத்மா தேய்மானமற்றது. எடுக்க எடுக்கக் குறையாத அக்ஷய பாத்திரம் ஆத்மா. பாரதி அந்த அம்சத்தை புண்ணியவாளர் தம் புகழினைப்போல் என வர்ணிக்கிறார். எதை அறிவதால் அனைத்தையும் அறிய முடியுமோ அதற்குப் பிரம்மம் என்று பெயர் என உபநிஷதம் கூறுகிறது. எதைப் பெற்றால் அனைத்தையும் பெற்றதாகும் என இன்முகத்தைக் கூறலாம். சிரிப்பைப் பாகுபாடு செய்தால் ஏராளமான நிலைகளைக் கூறலாம். வலிந்து சிரிப்பது, வழக்கமாகச் சிரிப்பது, கேலியாகச் சிரிப்பது, இனிமையாகப் புன்முறுவல் பூப்பது, இயல்பாக சிரிப்பெழுவது எனப் பல்வேறு வகைகளைக் கூறலாம். இயல்பாக இதயம் இனித்து முகம் மலர்வது இன்முகம். “அன்னைபோல் எவரும் சிரிக்க முடியாது” என்று கூறியவர்கள் ஏராளம். சிரிப்பு மனோதத்துவ செல்வம். மனம் நிறைந்து திரண்டு உருண்டு திண்மை பெற்ற நிலையைக் கூறுவது மலர்ந்த முகம். அந்நிலையில் முகத்தின் எல்லாப் பகுதிகளும் சிரிக்கும். Smiling features என்பார்கள். ஒரு முக்கிய மகாநாடு நடத்தினால் கொஞ்சநாள்வரை அந்த சூழல் அந்த ஸ்தாபனத்திலிருக்கும். மலர்ந்த ஜீவனுள்ளவர் ஓரிடம் வந்தால் அனைவரின் முகமும் பலநாள் மலர்ந்திருக்கும். அவரைப்பற்றிப் பேசினால் மனம் இதமாக இருக்கும். அவர் நினைவு நம்மையறியாமல் புன்முறுவலை வரவழைக்கும். தியானம் பூரண யோகத்திற்குரியது அல்ல. இதற்குரியது சமர்ப்பணம். சமர்ப்பணம் பூரணமான நிலையில் தியானம் உடலெல்லாம் இயல்பாகப் பரவி நிரம்பினால், உடலெல்லாம் புன்முறுவல் எழும். முறுவல் வளர்ச்சி மலர்ச்சியாகும் நேரம் எழுவது. ஜீவன்



விரிவடைவதால் நிகழும் நிகழ்ச்சியது. ஜீவன் விரிவடைவதால் அதைச் சந்திக்கும் வாழ்வும் மலரும். பொதுவாக வாழ்வு புரட்சியில் மலரும். புரட்சி நூறாண்டுகளில் எழுவதால் அந்த ஆண்டு நிறைவுகளில் அதன் சுவட்டைக் காண்கிறோம். மனிதனுக்குப் பருவமிருப்பதுபோல் சமூகத்திற்கும் பருவமுண்டு. பருவம் முதிர்ந்த நேரம் சமூகம் முழுவதும் மலர்ச்சியைக் காணலாம். கிராமம் நகரமானால், நகரம் பல்கலைக்கழக நகரமானால், புதிய துறைமுகம் கட்டினால், பெரும் தொழில் நிறுவப்பட்டால், அர்த்தமற்ற தலைவர்களை விலக்கி இலட்சிய புருஷர் பதவிக்கு வந்தால், 100 ரூபாய் நோட்டை சர்க்கார் எடுத்துக் கொண்டு 1000 ரூபாய் நோட்டு கொடுத்ததுபோல் வாழ்வு சுறுசுறுப்புப் பெறும். இளைஞன் புதியதாக சொந்தமாக மோட்டார் பைக் பெற்ற நிறைவை அந்த நேரம் சமூகம் பெற்று அனைவர் முகத்தையும் இன்முகமாக்கும். பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சிகளே கடந்த 300 ஆண்டுகளாக உலகம் கண்டது. ஒவ்வொரு 10 ஆண்டிலும் சமூகம் புரட்சிக்குரியதாகும் நிலை வளரும் நிலை.

(தொடரும்...)

★★★

**ஜீவிய மணி**

ஆபத்து நமக்கில்லை.

தொடர்ந்த அரிய வாய்ப்பு நம் பிறப்புரிமை.

தீராத பிரச்சனையில்லை. தீர்க்காதவையுண்டு.

வராத வாய்ப்பில்லை. பெறாதவை ஏராளம்.

அன்னையை அறிவது பாக்கியம்.

பெறுவது பேரருள்.

## அன்பர் கடிதம்

உயர்திரு. கர்மயோகி அவர்களுக்கு, கோடானுகோடி நன்றியுடன் எழுதிக் கொள்கிறேன்.

என் பெயர் சரவணன். நீண்ட காலமாக மாம்பலம் தியான மையத்திற்கு வந்து கொண்டிருக்கிறேன். எனக்கு திருமணம் ஆகி, மனைவியும் அன்னையை ஏற்றுக்கொண்டாள். எங்களுக்கு ஆறுவருடங்கள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது.

எல்லாம் நடக்கிறது, இது மட்டும் ஏன் நடக்கவில்லை என மனைவி கேட்பாள். அன்னை அருள்வார்கள் என்று மட்டும் கூறிவிட்டு அமைதியாக இருப்பதுபோல் காட்டிக்கொள்வேன்.

ஆனால், இப்பொழுது எல்லாம் உங்களுடைய புத்தகங்களை படிப்பதாலும், தியான மைய சொற்பொழிவுகளை அதிகம் கேட்பதாலும் விஷயம் நடக்கவில்லை என்றால் ஏன் நடக்கவில்லை என்பதைவிட, நடக்காததற்கு காரணமான தடை நமக்குள் எங்குள்ளது என்ற மிகப் பெரிய கேள்விதான் எழுகிறது.

அப்படிக் குழந்தை பிறப்பதற்கு எனக்குள் தடையாக இருக்கும் விஷயம் என்ன? எனத் தேடிய போது என்னால் தெளிவுக்கு வரமுடியவில்லை. சரி, இதை அன்னையிடமே பிரார்த்தனையாக வைப்பது என முடிவு செய்து, மதர் எனக்குள் தடையாக இருக்கும் விஷயம் என்ன என்பது தெரியவில்லை. நீங்கள்தான் காட்டிக் கொடுக்க வேண்டும், நான் என்னை மாற்றிக் கொள்கிறேன் என பிரார்த்தனை செய்தேன். மலைபோல பல விஷயங்கள் தொடர்ந்து வந்த போது, இத்தனை விஷயங்களா என மலைத்துப் போனேன்.

எப்படி அத்தனையும் விலக்குவது என யோசித்த போது, சரி இதையும் அன்னையிடமே பிரார்த்தனையாக வைப்பது என முடிவு செய்து, மதர் என்னால் மாற முடியவில்லை நீங்கள்தான் மாற்றித் தர வேண்டும், உங்கள் அருளை பெறுவதற்கு



எனக்குள் தடையாக இருக்கும் விஷயங்கள் அனைத்தையும் விலக்கி அருளுங்கள் என தொடர்ந்து பிரார்த்தனை செய்து வந்தேன்.

இந்த நேரத்தில் டாக்டரிடம் பரிசோதனை செய்தபோது குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பு மிகக்குறைவு எனக் கூறினார்கள். கலங்கிப் போனோம்.

மனைவியிடம், டாக்டர் கூறுவது, Test Report எதையும் நம்பாதே, அன்னையை மட்டும் நம்பு என அவளுக்குக் கூறினேன். மனதுக்குள் எனக்கும் நானே கூறிக் கொண்டேன்.

தொடர்ந்து அன்னையிடம் எனக்குள் உங்கள் அருளைப் பெறுவதற்கு தடையாக இருக்கும் விஷயங்களை விலக்கி அருள் புரியுங்கள் எனப் பிரார்த்தனை செய்து வந்தேன்.

தொடர்ந்து டாக்டரிடம் சிகிச்சை பெற்று வந்தோம். இந்த வருடம் அன்னை பிறந்தநாள் தின அதிகாலை பிரார்த்தனையில் கலந்து கொண்டேன். பிரார்த்தனை மனதை நிரப்பியதால் மையத்தை விட்டு என்னால் வரமுடியவில்லை. தொடர்ந்து குழந்தை வேண்டி பிரார்த்தனை செய்தேன்.

மாலை தியான மையத்திலிருந்து வரும் போது, மூன்று நாள் பிரார்த்தனை தவறியது இல்லை என எனக்குள் நீங்கள் கூறியது ஒலித்தது.

அப்போது அன்னை அன்பர் ஒருவர் குழந்தை வேண்டி பிரார்த்தனைக்கான நகல் கொடுத்து பிரார்த்தனை செய்யுங்கள் என்றார். அன்னையே கொடுத்ததாகவே பெற்றுக்கொண்டேன். தொடர்ந்து பிரார்த்தனையை மூன்று நாட்கள் செய்தேன். முடிவில் எனக்குள் அன்னையை அழைக்காமலே கண்கள் திறந்திருக்கும் போதே அன்னை சிரித்த முகம் தெரிந்து கொண்டே இருந்தது. இந்த உணர்வு தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது.

ஒருநாள் என் மனைவி என்னிடம் இப்பொழுது எல்லாம் அன்னை முகம் தெளிவாக எனக்குள் தெரிகிறது, தியான

மையத்தின் திருவுருவப்படங்கள் எல்லாம் தெரிகிறது என்று கூறினாள். அன்னைக்கு நன்றி கூறினேன்.

இந்த நேரத்தில் டாக்டரிடம் treatment எடுத்துக் கொண்டதின் Results வந்தது. அதை தியான மையத்தில் அன்னை பாதத்தில் வைத்து வணங்கி பிரித்து பார்த்த போது என் மனைவி கருவுற்றிருந்தாள் என வந்தது.

நன்றி கூற வார்த்தை இல்லை. அன்னையிடம் தொடர்ந்து நன்றி கூறி வந்தேன்.

நேற்று நவம்பர் ஒன்றாம் தேதி எங்களுக்கு அன்னையின் அருளால் அழகிய ஆண் குழந்தை பிறந்தது.

பிறந்தது அன்னையின் அருளே.

எங்களுக்கு தியான மையம் மூலமாகவும், புத்தகங்கள் மூலமாகவும் அன்னையின் அருளைப் பூரணமாகப் பெற வழி வகுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் உங்கள் பொற்பாதத்தில் விழுந்து வணங்குகிறோம்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உள்ளே போய், தன்னையிழந்து,
இழந்த நிலையினின்று தெளிவு பெற்று,
பெற்ற நிலை செறிந்து
நிறைந்த நேரம் எழும் சொல்
நமக்குரிய மந்திரம்.



## உண்மையின் பல்வேறு பரிமாணங்கள்

என். அசோகன்

உண்மையென்றால் நாம் உள்ளதை உள்ளபடி பேசுவது என்று புரிந்து கொள்கிறோம். இது உண்மைக்கு மிகவும் குறுகிய definition கொடுப்பதாகும். உண்மைக்கு விரிந்து பரந்த definition கொடுக்க வேண்டும் என்றால் எல்லாவிதமான உயர்ந்த பாஸிட்டிவ் வெளிப்பாடுகளும் உண்மையின் வெளிப்பாடுகள் என்று நாம் சொல்லலாம். அப்படிப் பார்த்தால், சின்ஸியரிட்டி, பொறுப்புணர்வு, தைரியம், நேர்மை, சுமுகம், பணிவு என்றெல்லாமே உண்மையின் வெளிப்பாடுகளாக அமைகின்றன.

1. இவற்றில் முதலில் நாம் சின்ஸியரிட்டியை எடுத்துக் கொள்வோம். சின்ஸியரிட்டிக்கு சிறந்த உதாரணம் வேண்டும் என்றால், நாம் டார்ஸியைத்தான் காட்ட வேண்டும். பொதுவாக நம்மைவிட கீழ்நிலையில் உள்ளவர்கள் எவரும் நம்மிடம் குறைகண்டுபிடித்தால், அதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாமல் கோபம்தான் வரும். ஆனால் டார்ஸியோ பிரபு வம்சத்தில் பிறந்தவனாக இருந்தாலும், அவனுக்குக் கீழ்நிலையிலிருந்த லிஸி சொன்னக் குறைகளை எல்லாம் ஏற்றுக் கொண்டான். “என்னுடைய குறைகளை எல்லாம் எனக்கு உணர்த்தி என்னை மனிதனாக்கிவிட்டாய். நீ என்னைத் திட்டியதுதான் சரி. அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்” என்று கதையின் இறுதியில் மனதாரப் புகழ்கிறான். லிஸி மாறி வருகிறாள் என்றால், அதற்கு முக்கியக் காரணம் டார்ஸியின் சின்ஸியரான மனமாற்றம்தான். இந்த மனமாற்றம் எவ்வளவு சின்ஸியர் என்று கேட்டால், இந்த உதவிகளெல்லாம் அவன் தனக்காகச் செய்தான் என்று அவள் நினைத்துவிடக் கூடாது என்பதற்காக தனக்கு இதில் பங்குண்டு என்பதே அவளுக்கு யாரும் தெரிவிக்கக்

கூடாது என்று உறுதிமொழியும் வாங்கியிருக்கின்றான். ஆகவே இந்த சின்ஸியரிட்டி சாதாரண சின்ஸியரிட்டியே இல்லை. ஒரு தெய்வீக அடக்கம் இதில் கலந்துள்ளது என்றுதான் நாம் சொல்ல வேண்டும். நிஜ வாழ்க்கையில் சின்ஸியரிட்டிக்கு எடுத்துக்காட்டாக நாம் காந்தியடிகளைச் சொல்லலாம். நாட்டிற்கு விடுதலை வாங்கித் தருவதுதான் தன் நோக்கம் என்று சொன்னாரே தவிர அதில் மறைமுகமாக தனக்கென்ற எந்தவொரு ஆதாயத்தையும் தேடவே இல்லை. நாடு விடுதலையான பின்பு அவர் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ தலையெடுத்திருந்தால், மக்கள் அதை பெரிதும் வரவேற்றிருப்பார்கள். ஆனால் அவரோ அந்தப் பதவிகளுக்காக ஆசைப்பட்டதாகக்கூடத் தெரியவில்லை. எல்லோரும் வியக்கும் வண்ணம் அடிப்படை உறுப்பினர் பதவியைக்கூட இராஜினாமா செய்தார். வன்முறையைத் தவிர்த்து சத்தியாக்கிரக முறையிலேயே சுதந்திரம் வாங்க வேண்டும் என்ற இடத்தில் அவர் தீவிரமாக இருந்தார். எங்கேனும் வன்முறை வெடித்தது என்று தெரிந்தால், உடனே ஒத்துழையாமைப் போராட்டத்தை நிறுத்தினார். சின்ஸியரிட்டியின் மிகச்சிறந்த வெளிப்பாடாக அன்னை என்ன சொல்கிறார் என்றால், "தன்னிடமுள்ள குறைகளை தான் ஒத்துக் கொள்வதுதான் மிகச்சிறந்த சின்ஸியரிட்டி" என்று கூறுகிறார். அரசியல் பெருந்தலைவர்கள் சுலபமாகத் தன்னுடைய குறைகளையோ, தவறுகளையோ ஒத்துக் கொள்வதில்லை, சுதந்திரம் பெற்றபின் இந்து, முஸ்லீம் இனக்கலவரம் வந்த பொழுது, தன்னுடைய அஹிம்சைக் கொள்கை தோற்றுவிட்டது என்று காந்திஜி அவர்கள் பகிரங்கமாக ஒத்துக் கொண்டார். "மக்களின் வன்முறை உணர்வுகளை அளவுக்குமீறி அடக்கிவிட்டேன். ஆங்கிலேயருக்கு எதிராக வெளிப்பட வேண்டிய வன்முறை இப்பொழுது இந்து முஸ்லீம்களுக்கிடையே வெளிப்படுகின்றது, நான் தவறு செய்து விட்டேன்" என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

தொழிலதிபர்களிடம் எப்படிப்பட்ட சின்ஸியரிட்டி இருக்க வேண்டும் என்று இப்பொழுது பார்ப்போம். தொழிலதிபர்கள்



பொதுவாக தன்னதிகாரத்திற்கு உட்பட்டுத்தான் எல்லாமே நடக்க வேண்டும் என்று நினைப்பார்கள். கம்பெனியின் வளர்ச்சியும், தன்னுடைய வளர்ச்சியும் சரிசமமாக இருக்க வேண்டும் என்றுதான் எதிர்பார்ப்பார்கள். தன்னுடைய செயல்பாடு கம்பெனியின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கிறது என்று தெரிந்தாலும், கம்பெனி வளர்ச்சிக்கேற்றபடி தன்னைத் திருத்திக் கொள்ள முன்வருகின்ற தொழிலதிபர்கள் குறைவு. முதலாளி ஒரு அறிவில்லாத order-ஐ போட்டுவிட்டார் என்றால், அதன்படி அக்கம்பெனி செயல்பட்டால், நஷ்டம் வரும் என்று தெரிந்தாலும்கூட தான் அறிவின்றி order-ஐ போட்டுவிட்டோம் என்பதை மறைப்பதற்காகத் தான் போட்ட அறிவில்லாத order-ஐ வலியுறுத்துகின்ற முதலாளிகளுமுண்டு. இதற்கு மாறாக கம்பெனி சிரமமான சூழ்நிலையில் இருக்கும் பொழுது பொறுப்பேற்க முன்வருகின்ற அதிகாரிகள் கம்பெனியின் தேவைகளை முன்வைத்துத் தன் தேவைகளைக் குறைத்து, கம்பெனிக்கு சின்ஸியராக உழைத்துமிருக்கிறார்கள். உதாரணமாக Lee Iacoca Chrysler கார் கம்பெனிக்குப் பொறுப்பேற்றபொழுது கம்பெனி மிகவும் சிரமமான சூழ்நிலையிலிருந்தது. அதைக் கருத்தில் கொண்டு கம்பெனி நிமிரும் வரையிலும் தான் சம்பளமே எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்றறிவித்தார். அவர் சொன்னபடி செய்தும் காட்டினார். இப்படி சின்ஸியராக அவர் செயல்பட்டதால்தான் இரண்டாயிரம் கோடி டாலருக்குமேல் நஷ்டத்தில் மூழ்கிய கம்பெனியை அந்த நஷ்டத்திலிருந்து மீட்டு அந்த இரண்டாயிரம் கோடிக்கும் மேலாக மேலும் இரண்டாயிரம் கோடி அவரால் சம்பாதிக்க முடிந்தது.

இப்பொழுது ஆன்மீக சின்ஸியரிட்டிக்கு வருவோம். ஆன்மீகத்தில் மறைமுகமாக அகந்தை ஒளிந்து கொள்ள இடம் தரக்கூடாது என்று அன்னை சொல்லியிருக்கிறார். சேவை செய்பவர்களும், பெரிய காணிக்கை வழங்குபவர்களும் அதன் வழியே பிரபலம் தேடக்கூடாது என்கிறார். இதில் தேறுபவர்களே குறைவு. ஆரோவில் நிறுவிய பொழுது அன்னைக்கு

நோபல் பரிசு வழங்க முன்வந்தார்கள். அப்பொழுது அன்னை ‘பகவான் செய்த பணியைத்தான் நான் தொடர்ந்து செய்கிறேன். அப்பட்சத்தில் இவ்வுடம்பிற்கென்று தனிப்பட்ட மரியாதையோ, அங்கீகாரமோ தேவையில்லை‘ என்றார். அவர் எடுத்துக் கொண்ட இறை சேவையில் எவ்வளவு சின்ஸியராக இருந்திருந்தால், இப்படி அவர் சொல்லியிருப்பார். இதுவரை சின்ஸியரிட்டி என்ற கருத்தைப்பற்றிப் பேசினேன்.

2. அடுத்ததாக பொறுப்புணர்வு என்ற குண விசேஷத்திற்கு வருகிறேன். பொறுப்புணர்வு என்பது தான் எடுத்துக் கொண்ட வேலையைத் திறம்படச் செய்து முடிப்பதாகும். பண்டைக் காலத்திலிருந்த கூட்டுக் குடும்பங்கள் இந்தப் பொறுப்புணர்விற்கு சிறந்த நிரூபணமாக விளங்கின. அதாவது குடும்பத்திலுள்ள அனைவரின் நலனுக்கும் கூட்டுக் குடும்பம் பொறுப்பேற்கிறது. அப்படிப் பார்க்கும் பொழுது சம்பாதிப்பவன், சம்பாதிக்காதவன், ஆரோக்கியமானவன், ஆரோக்கியமில்லாதவன் என்று எல்லோரையும் கூட்டுக் குடும்பம் சரிசமமாகப் பார்த்துக் கொள்ள முன்வருகிறது. ஊனமுற்றவர்கள், சம்பாதிக்கத் தெரியாதவர்கள் என்றிவர்களை எல்லாம் சமூகம் கைவிட்டது, சமூகத்தின் நாகரீகமற்ற நிலை. கூட்டுக்குடும்பம் எல்லோருக்கும் சரிசமமாகப் பொறுப்பேற்பது தான் நாகரீகமான நிலை. பண்டைய காலத்தில் கப்பலில் செல்வதே அபாயகரமான ஒரு வேலையாக இருந்தது. கப்பல் புயலில் சிக்கி மூழ்கிப்போனால், ஷிப்பிங் கம்பெனியின் முதலாளி பெருநஷ்டமடைவார். இதனால், ஷிப்பிங் பிஸினஸில் இறங்கவே பயந்து கொண்டிருந்தார்கள். நிலைமை விபரீதமாக இருப்பதை உணர்ந்து எல்லா ஷிப்பிங் கம்பெனிகளும் ஒன்று சேர்ந்து, இன்சூரன்ஸ் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தன. இப்படி நஷ்டத்திற்கு இன்சூரன்ஸ் கம்பெனி பொறுப்பேற்ற பிறகுதான் ஷிப்பிங் கம்பெனிகளே வளர்ச்சியடையத் தொடங்கின. விவசாயம் இத்தனை நூற்றாண்டுகளாக ஒரு முறையான தொழிலாக நடந்து வருவதற்குக் காரணமே விவசாயம் நடக்கின்ற



கிராமங்களில் கிராம சபாக்கள் ஊரில் விவசாயம் நல்லபடியாக நடப்பதற்குப் பொறுப்பேற்பதுதான். அதாவது யாரும் யார் நிலத்திலும் திருடக் கூடாது. ஊரில் விவசாய வேலை நடக்கும் பொழுது வேலைக்கு ஆட்கள் தேவைப்பட்டால், ஊர் மக்கள் வேலைக்குப் போக வேண்டும். கால்வாயில் வரும் தண்ணீரை ஊரில் விவசாயம் செய்பவர்கள் சுமுகமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்றிப்படி எல்லாம் கிராம சபாக்கள் தீர்மானங்களை நிறைவேற்றி அமுல்படுத்துகின்றன. இப்படி ஊர் பொறுப்பேற்காமல்போனால் எந்த விவசாயியுமே ஒருநாள்கூட நிம்மதியாக இருக்க முடியாது. ஓர் இரவுகூட நிம்மதியாகத் தூங்க முடியாது. திருடுபோய்விடுமோ, வேலைக்கு ஆள் கிடைக்காமல் போய்விடுமோ என்று பயந்து நிம்மதி இழக்க வேண்டியிருக்கும். இத்தகைய ஏற்பாடுகள் இன்றுவரை கிராமங்களில் நிறைவேற்றப்படுகின்றன என்பது கிராமிய அளவில் collective responsibility சிறப்பாகச் செயல்படுவதைக் காட்டுகிறது.

அன்னை “consciousness responsibility” என்று ஒன்றை சொல்கிறார். அது என்னவென்றால் தான் செய்யும் வேலைக்கு மட்டும் பொறுப்பேற்காமல் தான் சம்மந்தப்பட்ட இடங்களில் நடக்கும் தவறுகளுக்கும் பொறுப்பேற்பதாகும். உதாரணமாக ஏராளமான கடன் வாங்கி வைத்துவிட்டு தகப்பனார் இறந்து போனால், மகன் அக்கடன்களுக்கெல்லாம் தார்மீகப் பொறுப்பேற்பதைப் பார்க்கிறோம். ஒரு கம்பெனியிலுள்ள டிப்பார்ட்மெண்டில் பணிபுரிகின்ற ஊழியர் ஒருவர் செய்கின்ற தவற்றுக்கு துறைத் தலைவர் பொறுப்பேற்பதைப் பார்க்கிறோம். “என்னைக் கலந்து இவர் செய்யவே இல்லை. நான் எப்படி இவருடைய தவறுகளுக்குப் பொறுப்பேற்பது” என்று துறைத்தலைவர் கை விடுவதுமுண்டு. நான் பொறுப்பேற்கும் துறையில் ஒரு தவறு நடந்திருக்கிறது என்றால், அது எனக்குத் தெரிந்து நடக்கிறதோ, தெரியாமல் நடக்கிறதோ அதற்கு நான் பொறுப்பேற்கிறேன் என்று சொல்கின்ற துறைத் தலைவர்களும் உண்டு. ஐரோப்பிய

நாடுகள் இரண்டாம் உலகப்போரைத் தொடங்கி பயங்கரமாகப் போரிட்டுக் கொண்ட பொழுது, அன்னையும், பகவானும் உலகை அந்தப் போரிலிருந்துக் காப்பாற்ற தார்மீகப் பொறுப்பேற்றார்கள். அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று யாரும் அவர்களைக் கேட்கவில்லை. அப்படி அவர்கள் பொறுப்பேற்க முன்வராமல் போனாலும் யாரும் அவர்களைக் குறை சொல்வதற்கும் இடமில்லை. ஆனால் அமைதியாக யார் கண்களிலும் படாதவண்ணம் அவர்கள் பொறுப்பேற்று உலகைக் காப்பாற்றினார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். அதேசமயத்தில் இப்பொழுதுள்ள அரசியல்வாதிகள் இரயில் விபத்து நடந்தாலோ, விமான விபத்து நடந்தாலோ நாங்கள் பொறுப்பேற்பதற்கில்லை. இராஜினாமாவும் செய்ய முடியாது என்று அறிக்கை விடுவதைப் பார்க்கிறோம்.

இந்த இடத்தில் திரு. பென்னட் அவர்களின் பொறுப்புணர்வை நாம் அவசியம் கருத வேண்டும். லிடியா ஓடிப்போன பொழுது லிடியாவை தாயார்தான் கெடுத்தார். அவளை சரியாக வளர்க்கவில்லை, அவளுடைய ஆசைகளை எல்லாம் தூண்டி விட்டார், அதைச் செய்தார், இதைச் செய்தார் என்று பழியை திருமதி. பென்னட்மேல் போட்டுத் தான் தப்பித்துக் கொள்ள முயற்சி செய்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. அதுவரையிலும் குடும்ப விவகாரங்களில் ஒதுங்கியிருந்தவர் திடீரென்று ஆவேசம் வந்து, நடந்தது எல்லாவற்றிற்கும் நானே பொறுப்பேற்கிறேன். இதுவரையிலும் என் பெண்களைக் கண்டிக்காமல் விட்டது என் தவறு. இனிமேலாவது ஆபீஸர்கள் எவரும் என் வீட்டிற்கு வரக்கூடாது. என் பெண்களும் இஷ்டத்திற்கு நடனத்திற்கெல்லாம் போகக் கூடாது என்றும் திருமதி. பென்னட்டைக் குறையே கூறாமல், நடந்த தவறுகளுக்கெல்லாம் தாமே பொறுப்பேற்றுக் கொண்டார்.

லிடியாவின் திருமணத்திற்குத் திரு. கார்டினர் ஆறாயிரம் பவுண்ட் செலவு செய்துள்ளார் என்று தெரிய வரும் பொழுது அது தன்னால் திருப்பித் தர முடியாத தொகை என்று அவருக்கு நன்றாகத் தெரிகிறது. எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும்



அத்தொகையை தான் திருப்பித்தரவே விரும்புகிறேன் என்று அவர் தீர்மானம் எடுத்தார். இப்படி ஒரு சிறந்த பொறுப்புணர்வை அவர் வெளிப்படுத்துவதால்தான் டார்சி தானே முன்வந்து அந்தப் பணத்தை யாரும் திருப்பித் தர வேண்டியதில்லை என்று முன்கூட்டியே அறிவித்துவிடுகிறான். திரு. பென்னட்டிற்கு இப்படியொரு சிறந்த பொறுப்புணர்வு இருப்பது வாழ்க்கைக்குத் தெரிந்திருப்பதால்தான் அது முன்கூட்டியே டார்சியின் வாயால் அப்படியொரு வார்த்தையை வரவழைக்கிறது.

ஒருவருக்கு சிறந்த பொறுப்புணர்வு இருப்பதற்கு அடையாளமே சூழ்நிலை திடீரென்று மாறினாலும், தான் கொடுத்த வாக்கை மீறாமல் இருப்பதுதான். உதாரணமாக ஒரு விவசாய எஸ்டேட்டிற்கு மேனேஜர் பொறுப்பை ஒருவர் ஏற்க வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இந்த எஸ்டேட்டை நான் லாபகரமாக நடத்திக் காட்டுகிறேன் அது என் பொறுப்பு என்று சொல்கின்ற பட்சத்தில் அதன்பிறகு எப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலை வந்தாலும், தான் கொடுத்த வாக்கை மீறாமல் சமாளிப்பதுதான் அவருக்கு அழகு. பொறுப்பேற்ற இரண்டு வருடங்கள் கழித்து, மின்வெட்டு, ஆட்கள் பற்றாக்குறை, பூச்சிகள் தொல்லை, புயல் பாதிப்பு என்றெல்லாம் பிரச்சனைகள் வந்து எஸ்டேட் நஷ்டத்தில் மூழ்கும் பொழுது மேனேஜர் மனம்மாறி இப்படிப்பட்ட சிரமங்களை எல்லாம் நான் எதிர்பார்க்கவே இல்லை. மின்வெட்டால் பம்பு செட்டை இயக்க முடியவில்லை. அதனால் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. புயலால் மரங்கள் எல்லாம் விழுந்து விட்டதால், உற்பத்திக் குறைந்து விட்டது இவையெல்லாம் என் கையை மீறிய விஷயங்கள். என்னை விட்டுவிடுங்கள். நான் போகிறேன் என்பது பொறுப்புணர்வுக்கு அழகில்லை. இதற்கு மாறாக மின்வெட்டு வந்தாலும் பரவாயில்லை. டீசல் ஜெனரேட்டர் வாங்கிக் கொடுத்தீர்கள் என்றால், அதை வைத்துக் கொண்டு தண்ணீர் பாய்ச்சுகிறேன். புயலால் மரங்கள் வீழ்ந்துவிட்டால் என்ன புதிய கன்றுகளை நான் மீண்டும் நடுகிறேன். இரண்டு வருடம் கால அவகாசம் தாருங்கள்.

எஸ்டேட்டை பழைய நிலைமைக்குக் கொண்டுவந்து காட்டுகிறேன் என்று சொல்பவர்தான் பொறுப்புணர்வு மிகுந்தவர். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் வாழ்க்கை சிறந்த ரெஸ்பான்ஸை வழங்கும். இரண்டாம் உலகப்போரின் சமயம் பகவான் தன் ஆன்மீக பலத்தை சர்ச்சில் அவர்களின் மூலம் பயன்படுத்தினார். அப்பொழுது சீடர்கள் இந்தியாவின் எதிரியான சர்ச்சிலை ஏன் பயன்படுத்துகிறீர்கள். ஏதேனும் ஒரு பிரென்சுத் தலைவரை தேர்ந்தெடுத்திருக்கக் கூடாதா என்று கேட்டார்கள். அதற்கவர் "strong character" இல்லாதவர்களால் எனக்குப் பிரயோஜனமில்லை என்று பதிலளித்தார்.

3. அடுத்ததாக தைரியத்திற்கு வருவோம். பகவான் தன்னுடைய ஆன்மீக சிந்தனைகளில் எது மனிதனிடம் இல்லை என்றாலும் தைரியமும், அன்பும் இருந்தால்மட்டும் போதும் மனிதனைக் காப்பாற்றி விடலாம் என்று சொல்லியிருக்கின்றார். வாழ்க்கை பல ஆபத்துகளும், நெருக்கடிகளும் நிறைந்த ஒன்றாகும். இவற்றை எல்லாம் சமாளிக்க முக்கியமாக மனிதனுக்கு தைரியம் வேண்டும். வியாதி வந்தால், பிழைக்க முடியும் என்று தைரியமாக நம்ப வேண்டும். பிஸினஸில் நஷ்டம் வந்தால் அதிலிருந்து மீள முடியும் என்று நம்பிக்கையுடன் நினைக்க வேண்டும். உறவுகள் முறிந்து போனால் அவற்றை மீண்டும் சரிசெய்ய முடியும் என்று நம்ப வேண்டும். இதற்கெல்லாம் நிச்சயமாக தைரியம் மிகவும் தேவைப்படுகிறது.

இன்றைய காலக் கட்டத்தில் ஒரு தொழில் நடத்த முன்வருவதே ஒரு தைரியமான செயல்பாடு என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் எத்தனையோ பேர் தொழில் ஆரம்பித்துவிட்டு ஏனிந்தத் தொழிலை ஆரம்பித்தோம் என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொழிலை லாபகரமாக நடத்த வேண்டுமென்றால், பின்வருகின்ற விஷயங்களெல்லாம் சரியாக அமைய வேண்டும். அவையெல்லாம் அப்படி சரியாக அமையும் என்று நம்புவதே ஒரு தைரியமான செயல்பாடுதான். உதாரணமாக ஒரு தொழிலை ஒழுங்காக நடத்த



வேண்டுமென்றால், முதலில் வேலைக்கு ஆட்கள் ஒழுங்காக வர வேண்டும். ஆடரை நிறைவேற்றத் தேவைப்படும் மூலப்பொருட்கள் உரிய நேரத்தில் கிடைக்க வேண்டும். ஆட்கள் ஒழுங்காக வேலைக்கு வந்தாலும், அவர்கள் வேலை செய்வதற்குத் தடையில்லாமல் மின்சப்ளை வர வேண்டும். வேலைக்கு ஆட்கள் கிடைத்தால் மட்டும் போதாது. வேலையைத் தரமானதாக செய்யத் தெரிந்திருக்க வேண்டும். மேலும் சொன்ன தேதியில் ஆடரை தயார் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். சொன்ன தேதியில் தயார் செய்ய முடியாமல் டெலிவரி நாளைக் கடத்தினால் அந்த ஆடர் கேன்சலாவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. மேலும் கடன் வாங்கியிருந்தால், கடனுக்குரிய வட்டியை நேரத்தில் கட்ட வேண்டும். உற்பத்தி செய்கின்ற பொருளுக்கு இலாபகரமான விலை கிடைக்க வேண்டும். கச்சாப் பொருட்களின் விலையெல்லாம் மார்க்கெட்டில் உயராமல் இருக்க வேண்டும் என்றிப்படி எத்தனையோ அம்சங்கள் வியாபாரத்திலிருக்கின்றன. எதுவும் தனிமனிதனின் கட்டுப்பாட்டிலில்லை என்று பார்க்கும் பொழுது, ஒரு தொழிலதிபராகத் தலையெடுக்கிறார் என்றால் அவர் மிகவும் தைரியசாலி என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் மக்கள் தைரியமாக செயல்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. பல நடுத்தர குடும்பங்களுக்கு இந்த பிள்ளைகளுடைய கல்லூரிப் படிப்பு சிம்ம சொப்பனமாகத் தெரிகிறது. பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் பேமண்ட் சீட் வாங்க வேண்டும் என்றால், பல லட்சங்கள் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். Ortho Dontics course-இல் Post Graduate level-இல் ஒரு மாணவனுக்கு சீட் கிடைத்துப் படிக்க விரும்பினால், குறைந்தபட்சம் ஒரு கோடிகூட செலவாகும் என்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகையைக் கட்டுவதற்கு நடுத்தர குடும்பத்துப் பெற்றோர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்கிறார்கள். அந்தத் தொகையை எப்படியாவது புரட்டி விடுகிறார்கள் என்பது அவர்களுடைய மனோ தைரியத்தைக்

காட்டுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வளவு பெரிய செலவைச் செய்ய வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை, ஆகையால் மருத்துவப் படிப்பை எல்லாம் மறந்து விடு என்று பின்வாங்காமல், இதுதான் பிள்ளைக்கு வேண்டும் என்றால் எப்படியாவது சாதித்துக் காட்டுவோம் என்று பெற்றோர் செயல்படுவது அவருடைய தைரியத்தைக் காட்டுகிறது.

இன்றும் காதல் திருமணத்தில் இறங்கும் பெண்களைத் தவறாகப் பேசுபவர் உண்டு. ஆனால், காதல் திருமணம் செய்து கொள்ளும் பெண்களை நான் தைரியசாலி என்றுதான் சொல்லுவேன். பெற்றோர்களின் எதிர்ப்பை மீறி வேறு ஜாதியில் உள்ள ஆண்மகனைக் கைப்பிடிக்க ஒரு நல்ல துணிவு வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக பெண்களுக்கு ஒரு நல்ல பெயர் முக்கியம். அந்த நல்ல பெயர் கெட்டு விட்டால் அதை சரிசெய்வது மிகவும் கடினம். ஆண்களைப் பொதுவாக நம்ப முடியாது. சிற்றின்பத்திற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் பழக முன்வருவார்களே தவிர கல்யாணப் பேச்சினை எடுத்தாலே தட்டிக்கழிக்கின்ற ஆண்கள்தாம் அதிகம். இப்படிப்பட்ட நிலையில் ஒரு ஆண்மகனுடன் நெருங்கிப் பழகினால், அது கண்டிப்பாக திருமணத்தில் போய் முடியுமென்று ஒரு பெண் எப்படி தைரியமாக நம்புவது? இரண்டு வருடம் பழகியபின் திருமணப் பேச்சை எடுத்தால், அவன் பேசாமல் ஒதுங்கிக் கொண்டால் அதன்பின் இவளின் நிலை என்னாவது? இவ்வளவு ஆபத்திருந்தும் பல பெண்கள் காதலில் தைரியமாக இறங்கி அதைத் திருமணம் வரையில் கொண்டு செல்கிறார்கள் என்றால், இப்படிப்பட்ட பெண்களை தைரியசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்பொழுது தைரியம் என்றால் என்னவென்று பார்க்கலாம். உணர்வு மையத்தில் எனர்ஜி அதிகமாக இருந்தால், அது தைரியமாக வெளிப்படுகிறது. அதேசமயத்தில் உணர்வு மையத்தில் எனர்ஜி குறைவாக இருந்தால், அது தைரியமற்ற பயந்த சுபாவமாகக் காட்டுகிறது. தைரியத்திற்கும், வாழ்க்கையில் நாம் சந்திக்கும் பிரச்சனைகளுக்கும் தலைகீழ்



தொடர்புண்டு. அதாவது தைரியசாலிக்கு மற்றவர்களை மிரட்டும் பிரச்சனைகள் சிறு பிரச்சனைகளாகவே தெரியும். தைரியம் குறைந்தவர்களுக்கு அதேப்பிரச்சனைகள் சமாளிக்க முடியாத பெரிய பிரச்சனையாகத் தெரியும். ஏழையின் கையில் பணம் குறைவாக இருப்பதால், அவனுக்கு வருகின்ற செலவுகளெல்லாம் பெரிய செலவாகத் தெரிகின்றன. இருபதாயிரம் செலவு செய்து A/c வாங்குவது ஏழைக்குப் பெரிய செலவாகத் தெரிகிறது. ஆனால் அதே இருபதாயிரம் ரூபாய் பணக்காரனுக்குச் செலவேயில்லை. அம்மாதிரிதான் job interview என்றாலே பயந்தவர்கள் நடுங்கிப் போவார்கள். ஆனால் தைரியசாலி அதே interview-க்கு எந்தவித நடுக்கமும் இல்லாமல் வழக்கமாக வேலைக்குச் செல்வதுபோல சென்றுவிட்டு வருகிறான். தைரியத்தின் வெளிப்பாடு என்ன என்று நாம் கேட்கலாம். எந்தவித பிரச்சனையாக இருந்தாலும், அதை தன்னால் சமாளிக்க முடியும் என்பது தைரியத்தின் வெளிப்பாடு என்று சொல்லலாம். அதாவது மற்றவர்களால் முடியாது என்பதைத் தன்னால் செய்ய முடியும் என்ற மனநிலையில் ஒருவர் இருந்தால், அது அவரை தைரியசாலியாகக் காட்டுகிறது. மேலும் பிரச்சனை என்று வரும் பொழுது இதைத் தீர்க்க முடியாது என்று நினைப்பவர்களுக்கு வழியும் தெரியாது. ஆனால் பிரச்சனை பெரியதாகத் தெரிந்தாலும் இதற்கும் தீர்வுண்டு என்று தைரியமாக நினைப்பவர்களுக்கு மற்றவர்களுக்குத் தெரியாத வழி இவர்களுக்கும் தெரியும். உதாரணமாக ஆங்கில ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவிக்க முடியும் என்ற நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, அதற்குண்டான வழியே தெரியவில்லை. ஆனால் காந்திஜி அவர்களுக்கோ நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க முடியும் என்ற தைரியம் இருந்தது. இந்த தைரியம் இருந்ததால்தான் ஒத்துழையாமைக் கொள்கையைக் கடைபிடித்தால், நாட்டிற்கு விடுதலை வாங்கித் தரலாம் என்ற வழியும் அவருக்குத் தெரிந்தது.

(தொடரும்...)

***

## ஆகஸ்ட்-15
## கடந்த காலத் தவறுகளை அழிக்கும் நாள்

இல. சுந்தரி

கடந்த காலத் தவறுகளை அழிக்க ஆகஸ்ட்-15 எப்படி வலிமை பெற்றது?

இறைவனின் பகுதியான பகவான் ஸ்ரீ அரவிந்தரின் கருணையால் - அதாவது பகவான் ஆகஸ்ட்-15-ல் அவதரிக்கத் திருவுள்ளம் கொண்டதால் இந்நாள் பெருமை பெற்றது.

ஆன்மீகச் செல்வம் பொதிந்துள்ள பாரதம் ஆகஸ்ட்-15ல் விடுதலை பெற்றதும், மனிதன் இருளின் பிடியிலிருந்து விடுதலை பெற்று அருளின் ஆட்சிக்கு வரப்போவதன் அடையாளமே.

இத்திருநாளில் பகவானின் நினைவுகளில் திளைத்து, உணர்வு இனிப்பாகி வடித்த சாரமே இக்கதை.

**(அவதாரப் புருஷனுடைய திருவடிகளில் அவருடைய ஆன்மீக சக்தியின் முழுத்தீவிரம் செறிந்துள்ளது. பக்தனுடைய கண்கள் அவனுடைய ஆன்மாவுடன் தொடர்புடையவை. ஆன்மாவை வெளிப்படுத்துபவை. அவதாரப் புருஷருடைய திருவடிகளால் அவன் கண்கள் தீண்டப் பெற்றால் அவன் ஆன்மா நேரடியாகத் தீவிர ஆன்மீக சக்தியை அவரிடமிருந்து பெறும்.**

**அன்னையே! (அரவிந்தரே!) உம் திருவடிகளை என் கண்களில் ஒற்றிக் கொள்கிறேனம்மா! --ஸ்ரீ கர்மயோகி)**

1908-இல் ஸ்ரீ யுத அரவிந்த கோஷ் அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார் என்ற செய்தி கேட்டு இந்திய மக்கள் கொதிப்படைந்தனர். செய்வதறியாது திகைத்தனர். ஒரு வகையில் ஸ்ரீ அரவிந்தருக்கு அதுவே பாதுகாப்பு என்று எண்ணியவரும் உள. அவர் எழுத்தின் தீவிரமும், தூய்மையும்



யாராலும் கட்டுப்படுத்த இயலாததாகயிருந்தது. அவரைக் கண்டு வெள்ளையர் அஞ்சியதைவிட நம்மவர் அஞ்சியதே அதிகம் எனலாம்.

இந்த வழக்கு என்னாகும்? ஸ்ரீ அரவிந்தர் விடுதலை செய்யப்படுவாரா? என்பதே மக்களின் ஓயாத எண்ணமாக இருந்தது. அவர் விடுதலை பெற வேண்டும் என அவரை நேசித்த நெஞ்சங்கள் ஏங்கின.

திடீரென C.R. தாஸ் அவர்கள் ஸ்ரீ அரவிந்தரின் வழக்கிற்குப் பொறுப்பேற்ற செய்தி அனைவர்க்கும் சற்று நிம்மதியளித்தது.

அன்று அந்த அற்புத மாமனிதர் (ஸ்ரீ அரவிந்தர்) வழக்கு மன்றத்திற்கு அழைத்து வரப்படுவதைக் காண அன்னை பூமியின் அன்புக்குழந்தைகள் அலைமோதினர். ஆங்கில அடக்கு முறைக்கு ஆட்பட்டு அடியும் உதையும் பெற்றனர். அக்கூட்டத்தில் இரண்டு கண்கள் ஆர்வக் கனல் மூண்டு அவரை ஆராதித்தன. அக்கண்களின் சொந்தக்காரன் பவித்திரன். ஸ்ரீ அரவிந்தரின் செந்தாமரை மலர்போலும் திருவடிகளைத் தீண்டி விடத் துடித்தன அக்கண்கள். அப்பெருங் கூட்டத்தில் முட்டி மோதி முன்னால் வந்த அவனைக் காவலரின் கைத்தடி தாக்கவே சுருண்டு விழுந்தான். ஸ்ரீ அரவிந்தர் கணப்போது திரும்பி அருள் கனிய அவனைப் பார்த்தார். அப்பார்வை அவனை ஆரத் தழுவிற்று. உடனே மலர்ந்து எழுந்து அவர் செல்வதையே பார்க்கிறான். அவர் வெளியே வரும்போது மீண்டும் ஒரு தரிசனம் கிடைக்கும் என்ற ஆவலில் கூட்டம் காத்திருந்தது.

அவன் பேரார்வத்துடன் அம்மாமனிதரின் வரவிற்குக் காத்திருந்தான். வழக்கு மன்றம் அன்றைய பொழுதிற்குக் கலைந்தது. கூட்டம் வாயிலை நோக்கி விரைந்தது. பாதகம் அறியாத பகவான் பலத்த காவலில் வெளியே அழைத்து வரப்பெற்றார். மக்கள் கூட்டம் அவரை நோக்கி நகர காவலர் கூட்டத்தை விலக்கி அவரை போலீஸ் வானில் ஏற்றினர். மேலேபட்ட அடிகளும், காயங்களும் உடலை வருத்திய போதும் உள்ளே பெருகும் அன்பால் அவர் திருவடியைத்

தீண்ட விரைந்து, காவலரின் காட்டுமிராண்டித்தனத்தால் சுருண்ட போதும், அவர் கருணைமிகு விழிகளின் அரவணைப்பால் உயிர்த்தெழுந்தான்.

கூட்டம் கலைந்தது. அவனோ சிறைவாயிலில் தவமிருந்தான். அவன் தவம் பலித்த நாள் மே-6ஆம் தேதி. அவரை அழைக்க வந்த கூட்டத்தில் அவனே கடைசியில் நின்றான். புறநானூற்றுப் போர்க் காட்சியில் மாவீரன் படைக்குக் காவலாய் பின்னணியில் இருப்பானாம். அவன் வேண்டியது முதலிடம் அல்ல. அவரின் பாதுகாப்பே அவனிலக்கு.

இவன் அவர் பத்திரிகை அலுவலகத்தின் முன் பல நேரம் காத்துக் கிடப்பான். அவர் அக்காலத்தில் மாபெரும் அரசியல்வாதி என்பதால் அவரைச் சந்திப்பது எளிதாக இல்லை. என்றாலும் அவர் போகுமிடமெல்லாம் பின்தொடர்வான். சிற்சில வேளைகளில் அவர் பார்வை இவன்மீது கனிவாய்ப் பதியும். அப்போதெல்லாம். அவன் நெகிழ்ந்து போவான். அந்த மகிழ்வில் எழும் சக்தியில் மலையையே புரட்டுவது போன்ற கடுஞ்செயல்களையும் சாதிப்பான். கன்னியரின் கண்ணசைவில் காளையர் விண்ணையும் வீழ்த்துவர் என்ற இன்பியல் பாடிய கவிஞர்கள் இவனைப் பார்த்திரார்கள் போலும்.

இவன் அன்பு அந்தரங்கமானது. அவர்மீது எழும் தன் அன்பை இவன் யாருடனும் பகிர்ந்து கொண்டது கிடையாது. அன்பு மிகுதியால் இவன் அவரைத் தொடர்வது காண்போரை இவன் பைத்தியம் என்று எண்ணச் செய்தது.

1909ஆம் ஆண்டு உத்தர்பாராவில் தர்மரக்ஷணி சபை கூட்டம் நடந்தது. இந்தியத் திருநாட்டின் விடுதலை வேட்கை மிக்க மக்கள் மட்டுமல்லாது, ஆன்மீக நாட்டங்கொண்ட அன்பர்களும் கூடியிருந்த கூட்டத்தில் ஸ்ரீ அரவிந்தர் உரையாற்றப் போகிறார் என்பதறிந்து மக்கள் மரக்கிளைகள் மீதெல்லாம் அமர்ந்து அந்தப் புனிதரை தரிசிக்கின்றனர். அவர் வார்க்கும் சநாதன தர்மமெனும் அமிழ்தை செவிகளால் பருகுகின்றனர். கண்ணபிரானின் வேய்ங்குழலில் கட்டுண்ட பசுவினம் போன்று அசைவுமின்றி நிற்கின்றனர்.



அத்தனை ஆயிரவரில் ஒருவனாகப் பவித்திரன் அங்கிருந்தான். பகவானின் சொல்லருவியில் நீராடினான். அவர்கண்ட வாசுதேவ தரிசனத்தை அவன் அவரில் கண்டான். நெருங்க முடியாத அக்கூட்டத்தில் அவன் அவரைத்தன் நெகிழ்ந்த உணர்வால் நெருங்கிவிட்டான். அவர் மெலிந்த உடலில் திவ்ய தரிசனம் கண்டான். கருணை பொழியும் அவர் விழிகளில் இதயக் கோட்டையைத் தகர்க்கும் வலிமை கண்டான். மேடைமீது நிற்கும் அவர் மெல்லிய பாதங்களை அவன் தன் இதயத்தில் பதித்து அர்ச்சித்தான். அவர் திருவடிகள் தீண்டிய இடத்திலெல்லாம் கருணை மலர்கள் மலர்வதைக் கண்டு சிலிர்த்தான்.

நீரே எனது இதய தெய்வம். உம்மை நான் என் இதயச் சிறையில் சிறையிட்டுள்ளேன்.

ஏனோ என்னிதயம் உம்மை விடுதலை செய்ய மறுக்கிறது. உம்போன்றோர்க்கு ஏது விடுதலை! என்று அவனுள்ளம் அரற்றியது.

பத்திரிகை அலுவலகத்தின் வெளியே பல நேரம் காத்துக் கிடப்பான். அவர் போகுமிடமெல்லாம் அவரைப் பின் தொடர்வான். திடீரென அவர் மாயமாய் மறைந்திட ஏங்கி நிற்பான். ஸ்ரீ யுத அரவிந்த கோஷாக இருந்த காலத்திலேயே அவரை அவன் பகவானாகக் காண இரக்கம் கொண்டாரோ!

அவர் எழுதும் பத்திரிகையை விற்கும் பணியை சேவையாய் அவன் சேவை செய்வது காண்பவர்க்கு வியப்பளித்தது இயல்பே. சோற்றால் நிரம்ப முடியாத வயிற்றை அன்பால் நிரம்பிய நெஞ்சைக் கொண்டு நிறைத்தவன் அவன். கிடைத்த போது உண்டு, முடிந்த போது உறங்கி வாழ்வை ஒரு வரம்பற்ற நிலையில் வைத்திருந்தான். காண்பவர் கண்களுக்கு அவன் பைத்தியமே. தன்னையே தன்னில் மறைத்து மறைந்த பகவான் அவன் விசித்திர அன்பு கண்டு வியந்தார்.

ஒரு நாளிரவு. நீண்ட நேரம் அவர் எழுதிக் கொண்டிருந்தார். மறுநாள் காலை அச்சுக்குப் போக வேண்டிய அவசர செய்தியது. அவருடன் வேறு யாருமிலர்.

கதவை மெல்லத் தட்டும் ஒலி கேட்டு, எழுந்து வந்து கதவைத் திறந்த ஸ்ரீஅரவிந்தர், வெளியே பவித்திரன், விழிகளில் அன்புகனிய மூடிய பாத்திரம் ஒன்றில் சூடான டீயுடன் நிற்பதைக் கண்டார்.

அவன் முதுகை மெல்லத் தட்டி தம் நன்றியை உணர்த்திய வண்ணம் டீயை எடுத்துக் கொண்டார். அவனோ அவருடைய மென்மையான பாதங்களை உள்ளம் நெகிழ தரிசித்துக் கொண்டிருந்தான். அவர் டீயைப் பருகிவிட்டு குவளையை அவனிடம் கொடுத்து விட்டு, கதவைத் தாளிட அனுமதி வேண்டும் பாவனையில் நிற்க, இவன் வெளியே வந்தான். தலையை அண்ணாந்து குவளையில் மீதமுள்ள டீயை வாயில் கவிழ்த்து சுவைத்தான். மகிழ்ச்சி பொங்க குவளையை கொடுத்துவிட்டு வருவதற்குள் அலுவலகம் காலியாயிருந்தது. ஆங்கில நல்லபாம்புகள் படமெடுத்துச் சீறிய வண்ணமிருந்தன. அவன் பரபரப்படைந்தான். உள்ளே ஓடினான். அவனைத் தடுத்துத் தள்ளினர். மயங்கி வீழ்ந்தான்.

மயக்கம் தெளிந்தெழுந்தான். அலுவலகம் வெறிச்சோடிக் கிடந்தது. அவர் வீற்றிருக்கும் நாற்காலி தனிமையில் சோகமாய்க் காட்சியளித்தது. மீண்டும் சிறையில் வைக்கப்பட்டு விட்டாரோ! சோர்ந்து போனான். அங்கே அவர் எப்படித் துன்புறுகிறாரோ என்ற கவலையில் தோய்ந்தான். ஸ்ரீ அரவிந்தர் தலைமறைவானார் என்ற செய்தி மறுநாள் பேசப்பட்டது. அவர் சிறையில் துன்புறவில்லை என்று சற்று நிம்மதி. ஆனால் அவரைத் தரிசிக்க முடியவில்லையே என்ற ஏக்கம். மனம் போன போக்கில் அவரைத் தேடித் திரிந்தான். மீண்டும், மீண்டும் அந்தப் பத்திரிகை அலுவலகத்திற்கே வந்து வாயிலில் காத்துக் கிடப்பான்.

நீர் என்னை விட்டுப் போகவில்லை. போகவும் முடியாது உம்மை நான் போக விடமாட்டேன் என்று அரற்றத் தொடங்கினான்.

சுதந்திரப் போராட்ட காலம் என்பதால் வெள்ளையரசு காண்போரை எல்லாம் சந்தேகித்தது. வதந்திகள் வானளவு



எழுகின்றன. அவரை ஆங்கில அரசு வலையிட்டுத் தேடுகிறது.

பைத்தியம் பிடித்தவன்போல் அலுவலக வாயிலில் அமர்ந்திருக்கும் இவனைக் காவலர் மிரட்டுகின்றனர். ‘‘அவரைக் கண்டாயா?’’ என்கின்றனர்.

இவனோ, ‘‘கண்டேன்’’ என்று தைரியமாகக் கூறிச் சிரிக்கிறான்.

‘‘எங்கே கண்டாய்? எப்போது கண்டாய்?’’ என்று அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

‘‘அவரை உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. அவர் சிறையில் அடைக்கப்பட்டுவிட்டார்’’ என்கிறான்.

‘‘யார் அவரை சிறை பிடித்தது?’’ என்றனர் காவலர்.

‘‘யாரால் முடியும்? அவரை சிறையில் இட யாரால் முடியும்? உம் போன்ற அடக்கு முறையாளர்களும், அகங்காரவாதிகளும் அவரை நெருங்கவும் முடியாது’’ என்று கூறி பெரிதாய்ச் சிரித்தான்.

எரிச்சலடைந்த காவலர் ‘‘சொல், எங்கே அவரை ஒளித்து வைத்திருக்கிறாய்?’’ என்று அவனைப் பிடித்து உலுக்கினர்.

‘‘இதோ இங்கே, முடிந்தால் அவரைப் பிடித்துக் கொள்ளும்’’ என்று வறுமை நிறைந்த தன் சட்டையை விலக்கி, தன் வெறும் மார்பைக் காட்டினான்.

‘‘நீ என்ன பைத்தியக்காரனா?’’ என்று எரிச்சலுடன் கேட்டனர் காவலர்.

‘‘உம் நோக்கில் நான் பைத்தியமே. நீர் அதிகாரத்தால் அவரைப் பிடிக்க நினைக்கிறீர். நானோ அன்பால் அவரைப் பிடித்துவிட்டேன்’’ என்றான் பவித்திரன்.

ஒருவாறு இவன் பைத்தியம்தான் என்று முடிவு செய்து இவனை விட்டு விலகினர்.

அவன் தன் இதயத்தில் சிறைவைத்திருந்த அந்தத் திருவடிகளின் இன்ப நினைவிலேயே வாழ்ந்திருந்தான். சில காலங்கள் சென்றன.

ஸ்ரீ அரவிந்தர் புதுவையில் இருப்பது உலகம் அறிய வந்தது. அவனுக்கும் செய்தி எட்டியது. உடனே தன்னுள்ளம் கவர்ந்த அந்த உத்தமரைக் காண ஓடோடி வந்தான். புதுவையின் புனித மண்ணைத் தீண்டிய கணமே அவனுயிர் அவரைக் காணத் துடித்தது. யாருக்கும் எவ்விதத் தீங்குமின்றி அவனுயிர் புதுவையில் பகவான் தரிசனம் வேண்டிக் காத்திருந்தது.

**(உடலால் செய்யும் செயல்களைச் சிறப்பாகச் செய்தால், உணர்வால் செய்பவற்றை இனிமையாகச் செய்தால், மனத்தால் செய்பவற்றை அறிவோடு செய்தால் அது யோகத்தை மேற்கொண்டவர்க்கு நாம் பின்னணியிலிருந்து செய்யும் ஆன்மீகச் சேவையாகும். -- ஸ்ரீ கர்மயோகி)**

அது 1940 போன்ற காலக்கட்டம். அப்போது பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கு பக்தர்கள் பெருகிவிட்டனர். ஏதேனும் அவருக்குக் காணிக்கை அளித்து அவர் ஆசியைப் பெற பலரும் விரும்பினர். தேவைகளே ஏதுமில்லா அந்தப் பரம புருஷர் பக்தர்களின் அன்பிற்குக் கட்டுப்பட்டு பெற்றுக் கொண்டு ஆசி வழங்கி விடுவார். பிறகு சாதகர்களின் உபயோகத்திற்கு அவற்றை வழங்கி விடுவார். இந்நிலையில்தான் புதுவையைச் சேர்ந்த பக்தரொருவர் பகவானின் பாதங்களில் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள ஆசைப்பட்டார். தம் அன்பையெல்லாம் ஒருங்கிணைத்து பகவானின் சிறிய மென்மையான பாதங்களில் அணிந்து கொள்ளுமாறு ஒரு ஜோடி காலணிகளைச் சமர்ப்பிக்கப் பெரிதும் ஆர்வம் கொண்டார்.

புதுவையில் ரெங்க நாயுடுவின் கடை காலணிகளுக்குப் பிரசித்தி பெற்றது. அக்காலங்களில் கடையின் முன்னால் சிறந்த கைவினைத் திறம் மிக்க செக்கிலிகள் (செருப்புதைப்பவர்) கடை முதலாளிகளின் விருப்பத்திற்கு ஏற்ப காலணிகளைத் தயாரிப்பர். அவ்வப்போது வரும் ஆர்டர்களுக்கு உடனுக்குடனும் தைத்துக் கொடுப்பர். ரெங்க நாயுடுவின் கடைக்கு மூன்று செக்கிலிகள் இருந்தனர். அதில் கண்ணன் கைத்திறன் மிகுந்தவன். செய்யும் தொழிலைத் தெய்வமாய் மதிப்பவன். மிக முக்கியமான ஆர்டர்கள் அவனிடம் தான் கொடுக்கப்படும்.



புதுவை பக்தர் தம் ஆர்வப்படி பகவான் பாதங்களுக்குக் காலணி செய்ய நாயுடுவின் கடைக்கு வந்தார். தமக்கு ஒரு ஜோடி காலணிகள் மிக மென்மையாகத் தயாரித்துத் தர வேண்டும் எனக் கேட்டார்.

“அளவு கொடுத்துவிட்டுப் போங்கள் நாளையே நீங்கள் விரும்புவது போல் செய்து தரச் சொல்கிறேன்” என்றார் நாயுடு.

பக்தர் ஆசிரமத்துச் சாதகர் மூலம், பகவானின் திருப்பாதங்கள் சிறிய அளவிலும் மென்மையாகவும் இருக்கும் எனக் கேட்டறிந்திருந்தார். மேலும், அவர் எப்போதும் தம் மனத்தில் பகவானின் திருப்பாதங்களையே நினைத்துக் கொண்டிருப்பதால் ஒரு வெள்ளைத் தாளில் காலணிகளை வரைந்தார்.

இப்படி இவர் திடீரென ஒரு ஜோடி காலணிகளை வரைந்தது நாயுடுவிற்கு வியப்பளித்தது.

“யாருடைய காலணியின் அளவு இது. இத்தனை விரைவில் வரைந்து விட்டீர?” என்று வியப்பு மேலிடக் கேட்டார்.

“இது ஸ்ரீ ராமனின் பாதுகை போல, நான் இதயத்தில் சுமக்கும் காலளவு. இவை என் நெஞ்சில் ஆழப்பதிந்த திருவடிகள். அதனால்தான் உடனே வரைந்து விட்டேன்”. என்றார் பக்தர்.

நாயுடுவிற்கு ஒன்றும் புரியவில்லை. வந்திருப்பவர் நெகிழ்ச்சியாய் இருப்பது மட்டும் புரிந்தது.

“நாயுடு, செக்கிலி கண்ணனை அழைத்து, இந்தாப்பா, இவர் தரும் அளவை வாங்கிக் கொள். அவர் விரும்புவது போல மெத்தென்று மிக அழகாய்ச் செய்து கொடு” என்றார்.

பக்தர் முன்பணம் கொடுத்தார். பெற்றுக் கொண்ட நாயுடு, “நாளைக்குத் தைத்து விடுவான். நாளையே வந்து நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்”, என்றார்.

விடைபெற்ற பக்தர் மனம் நிறைந்து வீடு திரும்பும் வழியில் நண்பர் ஒருவரை சந்தித்தார். அவர் பக்தரின் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன என்று கேட்டார். அதற்கு பக்தர் தம் நீண்ட நாள் விருப்பம் நிறைவேறப் போவதை, காலணிகள் தயாராகப் போவதை மனம் உருகக் கூறினார்.

இதை அவர் நண்பர் கேட்டதுடன், புதுவையில் பகவானின் தரிசனம் காணக் காத்துக் கிடந்த பவித்திரனின் ஆவியும் கேட்டது. தன் தவம் பலிக்கும் நாளைய பொழுதை நோக்கி, நாயுடுவின் செருப்புக் கடை முன்புள்ள மரக் கிளையில் காத்திருந்தது. முன்பு உத்தர்பாராவில் மரக்கிளையில் உடலுடன் காத்திருந்த பவித்திரன் இன்று உடலை நீத்த பின்னும் காத்திருந்தான்.

மறுநாள் ஒரு புனித நாள், மானுட வரலாற்றில் இறைவனை நோக்கி மேலெழுந்த இதயங்களின் சங்கமம் நிகழ்ந்த நன்னாள். உடலுழைப்பில் சிறந்த கண்ணனின் கைவண்ணம் பேறு பெறும் நன்னாள். பக்தரின் காணிக்கை உருவாகும் நன்னாள். பவித்திரனின் தவம் பலித்து அவனுயிர் பகவானின் தரிசனம் பெறப் போகும் நன்னாள்.

மூவரின் கவனிப்பில் ஒரு புதிய காலணி உருவாயிற்று. பதப்படுத்திய தோலை எடுத்து வடிவமைக்கிறான் கண்ணன். பக்தரோ அவன் அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்து, அதையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

கண்ணனின் உடலுழைப்பு அக்காலணியில் சிறப்பாய் வெளிப்படுகிறது. பக்தரின் பக்தியுணர்வு அதில் இனிமையாய்க் கலக்கிறது. பவித்திரனின் தெளிவான மனமும் அதில் கலக்கிறது. பகவானின் யோகத்தில் பின்னணியிலுள்ள இம்மூவரும் ஆன்மீகச் சேவை புரிகின்றனரோ!

பக்தர் அந்தக் காலணி வடிவு பெறுவதையே எண்ணி பக்திப் பரவசத்துடன் அமர்ந்திருந்தார். காலணி உருவாகிவிட்டது.

கண்ணன் அவற்றைப் பணிவுடன் கையில் எடுத்து பக்தருக்குச் சற்றுத் தள்ளி நின்ற வண்ணம் ‘‘ஐயா, அளவு சரி பாக்குறீங்களா?’’ என்று அவர் காலருகே வைக்கக் குனிந்த போது, பக்தர் சட்டென்று எழுந்து, ‘‘இல்லையில்லை இது நம் காலில் அணியும் காலணியில்லை’’ என்று கூறி அது தன் காலில் படாதவாறு தம் கையிலே வாங்கிக் கொண்டார். அக்காலங்களில் செக்கிலியின் கையிலிருந்து பெறுவதைச்



சமுதாயம் தீட்டு என்று கூறி அனுமதி மறுக்கும். இப்படி பக்தர் தம் கைகளில் பெற்றுக் கொண்டதால் கண்ணன் மரியாதை குறை நேர்ந்து விட்டதே எனத் தவித்துப் போனான். பக்தரோ, பகவானுக்குப் பாதுகை செய்த கண்ணனின் கைகளைக் கண்ணில் ஒற்றிக் கொள்ள முடியாத தன் சாதி அகங்காரத்திற்கு வெட்கப்பட்டார். பவித்திரன் அப்பாதுகையில் புகுந்து அதை உயிர்ப்பித்தான். தன் கையிலிருந்தக் காலணி திடீரென உயிர்பெற்றதைப் போலுணர்ந்து பக்தர் உடல் சிலிர்த்தார். கடைக்காரருக்கும், கண்ணனுக்கும் நன்றி கூறி பக்தர் புறப்பட்டார்.

தம் பிரபுவின் திருவடிகளைத் தீண்டும் பேறு பெற்ற காலணி என்று அதனைக் கண்டு மகிழ்ந்து, புகழ்ந்து தம் கண்களில் ஒற்றிக் கொண்டு நன்றிப் பெருக்குடன் பெட்டியில் இட்டு, மறுநாள் பக்தியுடன் ஆசிரமத்திற்கு எடுத்துச் சென்றார். தமக்குத் தெரிந்த சாதகர் மூலம் அதை பகவானிடம் சேர்ப்பிக்கக் காத்திருந்தார்.

வெளியே வந்த சாதகர் தமக்குத் தெரிந்த இந்தப் பக்தரைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

பக்தர், சாதகரிடம் தம் காணிக்கையை பகவானிடம் சேர்ப்பிக்க வேண்டினார்.

‘‘அது என்ன காணிக்கை?’’ என்றார் சாதகர்.

பகவானின் திருவடிகளுக்குப் பாதுகை கொண்டு வந்திருக்கிறேன் என்று ஆறாத அன்புடன் கூறினார்.

அதைப் பெற்றுக் கொண்ட சாதகர் அதை பகவானிடம் சேர்த்து விடுவதாகக் கூறினார். பக்தர் மிகுந்த மன நிறைவுடன் திரும்பினார்.

காலணியைப் பெற்றுக் கொண்ட சாதகர், பகவான், அறைக்குள்ளே செருப்பணியும் பழக்கமில்லையே என்று எண்ணிய வண்ணம் எடுத்துச் சென்றார். முன்பே ஒருமுறை பகவானுக்குக் காணிக்கையாக வந்த காலணியை, ‘‘நான் காலணிகள் பயன்படுத்துவதில்லை. நளினிக்கு செருப்பென்றால்

பிடிக்கும். இதை அவருக்குக் கொடுங்கள்'' என்றது நினைவுக்கு வந்தது.

தயக்கத்துடன் அவற்றை எடுத்துக் கொண்டு பகவான் இருக்குமிடத்திற்குப் போனார் சாதகர். பகவானோ சாதகரைப் பார்த்து, ''எனக்கெதற்குக் காலணிகள் என்று பார்க்கிறாயா? அவை நான் அணிந்து கொள்வதற்கன்று. அவை என்னைத் தரிசிக்க வந்தவை'' என்றார், புன்னகை புரிந்த வண்ணம்.

அவற்றைக் கீழே வைக்கப் போனார் சாதகர். உடனே பகவான் அவரைத் தடுத்து, ''இரு, இரு இப்படிக் கொடு'' என்று அன்புடன் வாங்கி பெட்டியைப் பிரித்து காலணிகளை மெல்ல எடுத்து கையில் வைத்துக் கொண்டு உயிருள்ள ஒருவரைப் பார்ப்பது போல் பார்த்து கனிவுடன் புன்னகை செய்தார்.

சாதகருக்கு ஒன்றும் விளங்கவில்லை. காலில் அணியும் காலணியைக் கையில் வாங்கிக் கொண்டு புறாவையோ, கிளியையோ கையில் எடுத்துக் கொஞ்சுவது போன்ற அவர் செய்கை வியப்பளித்தது.

என்ன பார்க்கிறாய்? இவை, நீ நினைப்பதுபோல் வெறும் காலில் அணியும் செருப்புகள் இல்லை. ஒருவரின் உயிரும், ஒருவரின் உணர்வும், ஒருவரின் உடலுழைப்பும் இதிலிருக்கிறது. இவர்கள் தினமும் என்னைத் தரிசிக்க விரும்புகிறவர்கள். இவற்றை என் கண்ணில் படும் இடத்தில் வை என்று கூறி அவற்றைச் சாதகரிடம் கொடுத்தார் பகவான்.

பவித்திரன் பவித்திரமடைந்தான்

பக்தர் அதிர்ஷ்டம் பெற்றார்.

கண்ணன் முதலாளியானான்.

★★★★

**ஜீவிய மணி**

*அன்னை என்ற சொல் சரணாகதியின்*

*ஒலி வடிவம்*



## Sri Aurobindo and the Tradition

## ஸ்ரீ அரவிந்தரும், மரபும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

86. Western Psychology is recently acquainted with Cosmic Consciousness.
**In the East, it has always been a reality of our subjective progress.**

மேலை நாட்டு உளவியல், பிரபஞ்ச ஜீவியத்தைப் பற்றி சமீபத்தில்தான் அறிந்து கொண்டது.
**கீழை நாடுகளில் பிரபஞ்ச ஜீவியம் எப்போதுமே நம் அகவய முன்னேற்றத்தில் ஒரு மெய்ப்பொருளாகவே இருந்து வந்திருக்கிறது.**

87. Man lives in the ego & sense, separate from the world, all to himself.
**In the cosmic consciousness, Man is unified more and more with other minds, producing effects on the subjective being of others.**

உலகிலிருந்து பிரிந்து எல்லாம் தனக்கே என்னும் அகந்தை உணர்வோடு மனிதன் வாழ்கிறான்.
**பிரபஞ்ச ஜீவியத்தில் மனிதன் பிற மனங்களோடு மேன்மேலும் ஐக்கியமாவதன் மூலம் பிறரது அகஜீவனில் தாக்கத்தை ஏற்படுத்துகிறான்.**

88. The consciousness of the earth is real to the egoistic Man.
**For one who has had contact with Cosmic Consciousness, it is real in itself, in its works.**

அகந்தையாலான மனிதனுக்கு பூலோக ஜீவியம் மெய்யாக இருக்கிறது.

**பிரபஞ்ச ஜீவியத்தோடு தொடர்பு கொண்டவருக்கு அதுவும், அதன் செயல்பாடுகளும் மெய்யானவை.**

89. Ego is the truth of earthly material existence.
**The conscious Being is the truth of the infinite Supermind, is more than the universe, lives in Its own inexpressible infinity.**

பூலோக ஜட இருத்தலில் அகந்தையே சத்தியமாகக் கொள்ளப்படுகிறது.
**அனந்தமான சத்திய ஜீவியத்தின் சத்தியம் தன்னையறிந்த ஜீவனாகும். பிரபஞ்சத்தை விடப் பெரியதான அந்த ஜீவன் விவரிக்கவொண்ணா தன் சுயஅனந்தத்தில் வாழ்கிறது.**

90. The ascetic has seen the Spirit, the pure Self, the transcendent Silence. It is luminous, pure, without sinews of energy, flaw of duality, scar of division.
**Still, it is a part of the Omnipresent Reality which is the whole.**

ஆத்மாவை, தூய ஆன்மாவை, வரைகடந்த மௌனத்தை துறவி கண்டார். அது ஒளிமயமானது; தூயது; சக்தி சலனமற்று இருப்பது; இருமை எனும் குறையற்றது; பிரிவெனும் தழும்பற்றது.
**எனினும் அது எங்குமிருக்கும் சத்தியமான முழுமையின் ஒரு பகுதிதான்.**

★★★

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.



## நிலை தரும் நித்திய தரிசனம்

| | | |
|---|---|---|
| **மனித நிலை** | → | **எண்ணம் அலை பாய்கிறது, நெஞ்சு நிலையிலில்லை.** |
| **அன்பன் நிலை** | → | **அலை ஓய்ந்து நிலையை எய்துவது.** |
| **இலட்சியம்** | → | **ஆத்மா மனத்தில் ஆர்வமாக பிரதிஷ்டையாவது.** |
| **பிரம்மம்** | → | **ஆத்ம சத்தியம் அனைத்துமான நிலை.** |
| **சிருஷ்டி** | → | **பிரம்மம் புரண்டு பிரம்மாண்டமாவது.** |
| **பரிணாமம்** | → | **உள்ள ஆனந்தம் உணரும் ஆனந்தமாவது.** |
| **யோகம்** | → | **இருள் ஒளியாகும் இன்பம்.** |
| | | **பாதாளம் பரமாத்மாவின் பாதையை நாடுவது தோற்றமான நரகம் உண்மையான சுவர்க்கமாவது.** |
| | | **ஆண் ஆண்டவனில் பெண்ணாகப் பூர்த்தியாவது.** |

**எதுவுமற்ற பிரம்மம் எல்லாமுமாக மாறி மணப்பது.**

**அடுத்த மனிதன் ஆண்டவனாக வந்து, அன்பு செலுத்தி, இன்பம் துய்ப்பது.**

**இறைவன் வரும் தருணம் இகம் பரமாகும் இதமான இயற்கையாவது.**

**உள்ளம் சிந்தனையால் செயல்பட்டுப் பூரணம் தேடுவது.**

**உடல் உணர்வால் பூரித்துப் புல்லரித்துப் புளகாங்கிதமடைவது.**

**எண்ணம் உணர்வால் நிறைந்து செயலில் சிலிர்த்து மகிழ்வது.**

**தேச பக்தி மாநிலத்தை மகத்தானப் பெருநிறைவாக்கும் பேறாவது.**

**அறியாமை அனந்தனின் அன்பு மழையை அனைவருக்கும் தருவது.**

**உள்ளம் உடலின் சௌந்தர்யத்தை லாவண்யமாக்கும் உபாயம்.**

**உணவு உணர்ந்து மகிழ்ந்து உள்ளம் நிறையும் உத்தம வாய்ப்பு.**

**கண்டறியாதன காணும் கண்கள் காட்சியைத் திருஷ்டியாக்கும்.**

**மக்கள் தொகை மனத்தை மலர்போல் மாற்றும் மகிமை.**

**இந்திய நாடு இதமான இறைவனை இஷ்ட தெய்வமாக்கும் பூமி.**

## மனிதனுடைய மகிமை

ஒரு பட்டதாரி. எந்தத் திறமையுமில்லாதவர். எந்த இலட்சியமுமில்லாதவர். காலையில் சாப்பிட்டுவிட்டுக் கையலம்புவதிலிருந்து மத்தியான சாப்பாட்டை இடைவிடாது நினைப்பவர். இவருக்கு நண்பரில்லை. வீட்டில் எவருக்கும் இவரைப் பிடிக்காது. இவர் 1960இல் பட்டம் பெற்றார். தினமும் சினிமா பார்ப்பார். பணமில்லாததால் பெரிய கெட்ட பழக்கம் ஏற்பட வழியில்லை. இவரையறிபவர்கள் ''மனிதன் என்றால் இவர் போல இருக்கக் கூடாது'' என நினைப்பார்கள். கல்லூரியில் NCC யில் shooting ஆரம்பித்தபொழுது முதல் நாள் முதல் முறையாக 5 முறை தொடர்ந்து bullல் சுட்டார். இது உலகத்திலேயே இதுவரை ஏற்படாத ரிக்கார்ட். 20 இளைஞர்கள் இவரை சேர்ந்து அடிக்க வந்தபொழுது இவருக்கு வந்த ஆவேசம் அனைவரையும் நடுங்க வைத்தது. ஒருவனை சக்கையாக அடித்தார். அனைவரும் ஓடி விட்டனர். போர்க்களத்தில் முன்னணியில் நின்றால் நான் நானாக இருப்பேன் என்றார். இவர் வீராதி வீரன். அவருடைய திறமைக்குப் பலனில்லாத இடத்தில் இவர் பயனற்றவராகத் தோன்றுகிறார். அன்னைக்கு சேவையை ஏற்று ஏராளமான கிராமங்களுக்கு சுபீட்சம் எழும் வகையில் இவர் மாறிய சுபாவம் பயன்பட்டது. மனிதனுக்கு இவ்வகைத் திறமையில்லை. ஒருவனுடைய திறமை உச்சக் கட்டத்தில் வெளிப்படும் வாய்ப்பு ஏற்படும். சமூகம் உருவானால் ஒரு மனிதனால் உலகமே வாழும். அந்நிலை இன்றில்லை என்பது பரிதாபமான நிலையில்லை. Nature இயற்கை பெரும் சாதனைக்குத் தன்னைப் பொறுமையாகத் தயார் செய்வதை அறியும் ஞானமோ பொறுமையோ நமக்கில்லை.